04.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## ஆந்திராவிலிருந்து அதிக வரத்து குறைந்தது வெங்காயம் விலை

ஆந்திர மாநிலத்தில் இருந்து வரத்து அதிகரித்துள்ளதாலும், பதுக்கல் குறைந்ததாலும், தமிழகத்தில் வெங்காய விலை சரிந்துள்ளது.ஏற்றுமதிக்கு தடைவிலை உயர்வை கட்டுப்படுத்த, ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து, 10 ஆயிரம் டன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய மத்திய அரசு ஏற்பாடு செய்தது; அத்துடன் ஏற்றுமதிக்கும் தடை விதித்தது. இதனால், வெங்காயத்தை பதுக்கியவர்கள், அவற்றை விற்பனைக்கு அனுப்பி வருவதாலும், ஆந்திராவில் இருந்து, தமிழகத்திற்கு வெங்காய வரத்து அதிகரித்துள்ளதாலும், தமிழகத்தில் வெங்காய விலை குறைந்துள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில், சில நாட்களுக்கு முன், கிலோ, 70 ரூபாய் வரை விற்ற பெரிய வெங்காயம், தற்போது, தரத்திற்கு ஏற்ற வகையில், 40 முதல் 55 ரூபாய் வரை விற்கப்படுகிறது. சென்னையை போலவே, மற்ற மாவட்டங்களில் உள்ள மார்க்கெட்களிலும் வெங்காயம் விலை குறைந்து உள்ளது.

**வாடகை குறைவு:**

**இதுகுறித்து, கோயம்பேடு மார்க்கெட் ஆலோசகர் சவுந்தர்ராஜன் கூறியதாவது:**தற்போது, 40 ரூபாய்க்கு, ஆந்திர வெங்காயம் விற்கப்படுகிறது. மகாராஷ்டிரா மாநில வெங்காயத்தை விட இதன் அளவு சற்று குறைவாக இருக்கும். ஆனால், தரத்தில் எந்த மாறுபாடும் இருக்காது. ஓட்டல்களுக்கு மட்டும் தான், பெரிய அளவில் வெங்காயம்

தேவைப்படும்.

எனவே, ஆந்திர வெங்காயத்தை, நுகர்வோர் அதிகளவில் வாங்கி பயன்படுத்தலாம். தமிழகத்தை ஒட்டி ஆந்திரா உள்ளதால், வாகன வாடகை குறைவு. இது தான், தமிழகத்தில் வெங்காயம் விலை குறைந்து உள்ளதற்கு காரணம். இவ்வாறு அவர் கூறினார்.

பண்ணை பசுமை கடைகளில் விலையை குறைக்க வேண்டும்

தமிழகத்தில், 42 இடங்களில், அரசால் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. வெளி மாநிலங்களில் கொள்முதல் செய்யப்படும் வெங்காயம், இங்கு, 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் வெங்காயம் விலை சரிந்துள்ள நிலையில், இங்கும், வெங்காய விலையை குறைக்க, அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## 69 எண்ணெய் வயல்கள் ஒதுக்கீட்டில் புதுமை



புதுடில்லி:தங்களால் நடத்த முடியவில்லை என தெரிவித்து, பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களான, ஓ.என்.ஜி.சி., மற்றும் ஆயில் இந்தியா நிறுவனங்கள், மத்திய அரசிடம் ஒப்படைத்துள்ள எண்ணெய்

வயல்களில், 69 வயல்களை தனியாருக்கு ஏலம் விடவுள்ள வரவேற்கத்தக்க முயற்சியில், வருவாயை பங்கிடும் புதிய முறை பின்பற்றப்பட உள்ளது.இதன் மூலம், இதுவரை இல்லாத வகையில், புதிய முறையில் மத்திய அரசு வருமானத்தை பெருக்கிக் கொள்ள உள்ளது.

## நடைமுறை:

கனிமங்கள், தாதுப்பொருட்கள், தொலைத்தொடர்புக்கான, 'ஸ்பெக்ட்ரம்' அலைவரிசை போன்ற இயற்கை வளங்களை தனியாருக்கு ஒதுக்கும் மத்திய அரசு, ஏலத் தொகையை பெற்றுக் கொள்வதுடன் ஒதுங்கிக் கொள்வது தான் இதுவரை பின்பற்றப்படும் நடைமுறை.

புதிய முயற்சியாக, தனியாருடன் இணைந்து, வருவாயை பங்கிட்டுக் கொள்ளும், 'ரெவன்யூ ஷேரிங்' முறை, 69 எண்ணெய் வயல்கள் ஒதுக்கீடு விவகாரத்தில் பின்பற்றப்பட உள்ளது. இதன் மூலம், மத்திய அரசுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில், அப்போதைய சந்தை நிலவரப்படி வருவாய் வந்து கொண்டே இருக்கும்.

## கூடுதல் கட்டணம்

எண்ணெய் வயல்களை ஏலம் எடுக்கும் நிறுவனங்கள், மத்திய அரசுக்கு, 'செஸ்' எனப்படும், கூடுதல் கட்டணம் செலுத்த தேவையில்லை என்பது, அவர்களுக்கு அளிக்கப்படும் ஊக்கமாக அமையும். கடந்த, 2014 - 15ல், கச்சா எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து, 16 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு கூடுதல் கட்டணமாக பெற்றுள்ளது. அந்த தொகையை, இந்த நிறுவனங்கள் வழங்க வேண்டிய தேவையில்லை.

## இருதரப்பிற்கும் லாபம்

* செஸ் வரி செலுத்த தேவையில்லை என்பதால், எண்ணெய் எடுக்கும் நிறுவனங்களின் நிதிச்சுமை குறையும்; வருவாய் அதிகரிக்கும். அரசுக்கும் அதனால் கூடுதல் வருவாய் பங்கீடாக தரப்படும்.

* எண்ணெய் வளங்கள் முழு அளவில் எடுக்கப்படும். அதன் சந்தை விலைக்கு ஏற்ப வருவாய் கிடைக்கும். அந்த வருவாய், தனியாரும், அரசும் பங்கீடு செய்து கொள்ளும்.

* ஏலம் எடுக்கும் நிறுவனங்கள் முதற்கட்டமாக அதிக தொகையை செலுத்த வேண்டிய தேவையில்லை. இதனால், இருக்கும் தொகை மற்றும் வளங்களை உற்பத்திக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

* உற்பத்தி மற்றும் செயல்பாட்டில் அரசின் தலையீடு அதிகம் இருக்காது.

* எவ்வளவு வருவாய் கிடைத்தது என்பதை அவ்வப்போது அந்த நிறுவனங்கள், அரசுக்கு தெரிவிக்க வேண்டும். அதற்கு ஏற்ப வருவாயும் மாறுபடும்.

**எதற்காக இந்த புதிய முறை?**

வருவாய் பங்கீடு முறை எதற்காக பின்பற்றப்படுகிறது என்பது குறித்து, பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதாவது:

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்து வரும் நிலையில், எண்ணெய் வயல்களில் துரப்பண எண்ணெய் எடுக்கும் பணி மற்றும் ஆய்வுப் பணி மேற்கொள்ளும் செலவு அதிகம் பிடிக்கும் என்பதால் தான், முதற்கட்டத்திலேயே அதிக தொகையை அரசுக்கு தர வேண்டாம். வருவாயில் பங்கீடு செய்து கொள்ளலாம் என்ற புதிய முறை பின்பற்றப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

### இறக்குமதி 10 சதவீதம் குறையும்:

இந்த புதுமையான அறிவிப்பை நேற்று முன்தினம் வெளியிட்ட, பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதன் முக்கிய அம்சங்களாவன:

* பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களான, ஓ.என்.ஜி.சி., மற்றும் ஆயில் இந்தியா, தங்களால் நடத்த முடியவில்லை என, ஒப்படைத்துள்ள

எண்ணெய் வயல்களில், 69 எண்ணெய் வயல்கள் தனியாருக்கு ஏலம் விடப்படும்.

* அவற்றில், 63 வயல்கள், ஓ.என்.ஜி.சி.,யாலும், ஆறு வயல்கள் ஆயில் இந்தியாவாலும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

* வயல்களில், 36 வயல்கள் ஆழ்கடலிலும், 33 வயல்கள் நிலத்திலும் அமைந்துள்ளன.

* எண்ணெய் வயல்களில் இருந்து, 8.9 கோடி டன் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு எடுக்க முடியும்.

* 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் கிடைக்கும்.

* உள்நாட்டு எண்ணெய் உற்பத்தி அதிகரித்து, 2022ம் ஆண்டிற்குள், 10 சதவீத எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இறக்குமதி குறையும். இதனால், மத்திய அரசுக்கு அன்னியச் செலாவணி பற்றாக்குறை அளவு குறையும்.

## கோவை வேளாண் பல்கலை 'டிப்ளமோ' படிப்பு கலந்தாய்வு; 229 மாணவர் தேர்வு

கோவை:கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலையில், நேற்று துவங்கிய 'டிப்ளமோ' படிப்புக்கான கலந்தாய்வில், 229 பேர் தாங்கள் விரும்பிய இடங்களை தேர்வு செய்தனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலையின் கீழ், கோவில்பட்டி, அம்பாசமுத்திரம், தஞ்சை உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் எட்டு அரசு உதவிபெறும் கல்லுாரிகள் தவிர, ஆறு தனியார் கல்லுாரிகள் உள்ளன; இக்கல்லுாரிகளில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை ஆகிய இரு 'டிப்ளமோ' படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.அரசு உதவி பெறும் கல்லுாரிகளில், 360 இடங்கள், தனியார் கல்லுாரிகளில், 167 இடங்கள் என, 527 இடங்கள் இப்படிப்புகளுக்கு உள்ளன. இதில், குமரி மாவட்டம்

பேச்சிப்பாறையிலுள்ள, அரசு உதவிபெறும் கல்லூரியில் மட்டுமே, 40 இடங்களுக்கு தோட்டக்கலை படிப்பு உள்ளது.இக்கல்லூரிகளில் முதலாமாண்டு சேர்க்கைக்கு, மாநிலம் முழுவதும் 1,847 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். இதில், தரப்பட்டியலின் அடிப்படையில், 800 மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

துவக்க நாளான நேற்று, 229 பேர் தாங்கள் விரும்பிய கல்லூரிகளை தேர்வு செய்தனர். நிறைவு நாளான இன்று, 400 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.பல்கலை மாணவர் சேர்க்கைக்குழு சேர்மன் மகிமைராஜ் கூறுகையில், "முதல் நாள் அழைப்பு விடுக்கப்பட்ட, 400 பேரில், 229 பேர் பங்கேற்று, தாங்கள் விரும்பிய கல்லூரிகளை தேர்வு செய்தனர். நாளை (இன்று),400 மாணவர்கள் தரப்பட்டியல் அடிப்படையில் அழைக்கப்பட்டுள்ளனர்," என்றார்.

## மாவட்டத்தில் பலத்த மழை:விழுப்புரத்தில் 105 மி.மீ., பதிவு

விழுப்புரம்:மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழையில், விழுப்புரத்தில் 105 மி.மீ., மழை பதிவானது.விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இடியுடன், கூடிய பலத்த மழை பெய்தது. இதில், விழுப் புரம் புதிய பஸ் நிலையம், கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம், காமராஜர் நகராட்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கி கடல்போல் காட்சியளித்தது.மழை நிலவரம்:விழுப்புரம் நகரில் 105 மி.மீ.,- செஞ்சி 77 மி.மீ.,- திருக்கோவிலூர் 58 மி.மீ.,- திண்டிவனம் 55 மி.மீ.,- வானூர் 22 மி.மீ.,- மரக்காணம் 5 மி.மீ.,- கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் பகுதியில் தலா 3 மி.மீ., மழை பதிவானது.

## மானியம் பெறுவதற்குவிவசாயிகளுக்கு அழைப்பு

அவலூர்பேட்டை:நெல் இயந்திர நடவு சாகுபடியில் எக்டேருக்கு மூன்றாயிரம் ரூபாய் மானியம் பெற விவசாயிகளுக்கு, வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி அழைப்பு விடுத்துள்ளார்.
இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:இந்திய அளவில் தமிழகம் நெல் உற்பத்தியில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. நவீன தொழில் நுட்பங்கள் , புதிய ரகங்கள், இயந்திரமாக்குதல் போன்ற தொழில் நுட்பங்களை முழுமையாக பயன்படுத்தினால் தற்போதைய மகசூலை விட 50 சதவீதம் கூடுதலாக மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.தமிழக அரசு நெல் இயந்திர நடவு சாகுபடியை ஊக்குவிக்க ஒரு எக்டேருக்கு மூன்றாயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறது. மேல்மலையனூர் வட்டாரத்தில் நடப்பாண்டில் 1200 எக்டேரில் இயந்திர நடவு சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தில் ஒரு விவசாயி 2 எக்டேர் வரையில் பயன் பெறலாம். சிட்டா அடங்கல், இயந்திர நடவு போட்டோ, ஆதார் எண், ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு எண் மற்றும் வங்கி கணக்கு எண் ஆகியவற்றுடன் தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண் அலுவலரிடம் பதிவு செய்து விவசாயிகள் பலனடையலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

## உளுந்தம் பருப்பு வரலாறு காணாத விலை உயர்வு: 4 மாதத்தில் கிலோவுக்கு ரூ.42 அதிகரிப்பால் அதிர்ச்சி

சேலம்: தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த, வடமாநில உளுந்தம் பருப்பு வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளதால், விலை உயர்ந்துள்ளது.கடந்த நான்கு மாதத்தில் கிலோவுக்கு, 42 ரூபாயும், குவிண்டாலுக்கு, 4,000 ரூபாயும் அதிகரித்துள்ள நிலையில், மேலும் விலை உயர்வு ஏற்படும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்துக்கு தேவையான உளுந்தம் பருப்பு, மகாராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. அம்மாநிலங்களில் பெய்த பருவ மழையால், உளுந்து அறுவடையில் பாதிப்பு ஏற்பட்டு, உளுந்தம் பருப்பின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில், தமிழகத்திலும், உளுந்து விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை. பர்மா, மலேசியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து, தமிழகம் உட்பட இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு விற்பனைக்கு வரும் பருப்பு ரகங்களின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. வரத்து எதிர்பார்த்த அளவு இல்லாததால், உளுந்தம் பருப்பின் விலை தொடர்ந்து, உயர்ந்து வருகிறது. ஆக.,25ல் குவிண்டாலுக்கு, 500 ரூபாயும், கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை விலையில் உயர்வு ஏற்பட்டது. செப்.,1ல் குவிண்டாலுக்கு, 600 ரூபாயும், கிலோவுக்கு, 7 ரூபாயும் அதகரித்து, வரலாறு காணாத விலை உயர்வை சந்தித்து உள்ளது. கடந்த, நான்கு மாதத்தில், உளுந்தம் பருப்பின் விலை, குவிண்டாலுக்கு, 4,000 ரூபாயும், கிலோவுக்கு, 42 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

சேலத்தை சேர்ந்த பருப்பு வியாபாரி குணசீலன் கூறியதாவது: தமிழகத்துக்கு தேவையான பயிறு வகைகள் அனைத்தும், வடமாநிலங்களில் இருந்து தான் வருகிறது. துவரையின் வரத்து சரிந்ததை தொடர்ந்து உளுந்தின் வரத்தும் சரிந்துள்ளதால், துவரம் பருப்பை தொடர்ந்து, உளுந்தம் பருப்பு விலை அதிகரித்துள்ளது. பொதுமக்கள் பாசி பருப்புக்கு மாறி வருவதால், அதற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு, அதன் விலையியும் உயர வாய்ப்புள்ளது. பண்டிகை சீஸன் நெருங்குவதால், அனைத்து ரக பருப்பின் விலையும் கிலோ, 150 ரூபாய் முதல், 200 ரூபாய் வரை, விலை உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## மேட்டூர் நீர்மட்டம் 89 அடியாக சரிவு

மேட்டூர்: நீர்வரத்து சரிந்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 89.130 அடியாக சரிந்தது. மேட்டூர் அணை நீர்மட்டம், கடந்த, 28ம் தேதி, 93.560 அடியாகவும், நீர் இருப்பு, 56.958 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு, 15,000 கனஅடி நீர் பாசனத்துக்கு திறக்கும் நிலையில், நேற்று முன்தினம் வினாடிக்கு, 5,851 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று, 4,020 கனஅடியாக சரிந்தது. இதனால், நேற்று முன்தினம், 90.050 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 89.130 அடியாக சரிந்தது. கடந்த, 5 நாளில் நீர்மட்டம், 4 அடியும், நீர்இருப்பு, 5 டி.எம்.சி.,யும் சரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சம்பா நடவு பணிகளுக்கு ரூ.3 ஆயிரம் மானியம்

பள்ளிபாளையம்: "பள்ளிபாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதியில், ட்ரே மூலம் சம்பா நடவு பணிகள் மேற்கொள்ள, ஒரு ஏக்கருக்கு 3,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது' என பள்ளிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோக் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: பள்ளிபாளையம் வட்டாரத்தில், நடவு சம்பா பருவத்தில் இயந்திரத்தைக் கொண்டு நடவு பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பள்ளிபாளையம் வட்டாரத்திற்கு அலமேடு, குமாரபாளையம், ஆலாம்பாளையம், களியனூர் உட்பட்ட பகுதிகளில் மட்டும், 500 ஏக்கர் பரப்பளவில் இயந்திரத்தின் ட்ரே மூலம் நடவு செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் நடவு செய்ய, 80 தட்டுகள் தேவைப்படுகிறது. நன்கு சலிக்கப்பட்ட மண்ணை இந்த ட்ரேவில் நிரப்பி, அதன் மீது விதைகளை தூவி விட

வேண்டும். பூவாளி மூலர் நீர் தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு, 12 கிலோ விதை தேவைப்படுகிறது. இதையடுத்து அலமேடு பகுதியில் உள்ள ரங்கசாமி என்பவரது விவசாயி நிலத்தில் மேற்குறிப்பிட்ட முறைப்படி நடவு செய்யப்பட்ட நாற்றங்களை மாவட்டவேளாண்மை இணை இயக்குனர், துணை இயக்குனர் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். மேலும், பள்ளிபாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ட்ரே மூலம் சம்பா நடவு பணிகள் மேற்கொள்ள, ஒரு ஏக்கருக்கு, 3,000 ரூபாய் பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. விபரங்களுக்கு பள்ளிபாளையம் வேளாண்மை வரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

### தேசிய வேளாண் திட்டத்தில் 50% மானியத்தில் உரம்

மோகனூர்: "தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில் நெல் மற்றும் பல்வேறு பயிர்களை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு, வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி (எண்ணெய் வித்து) திட்டத்தின் கீழ், அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா உள்ளிட்ட உயிர் உரங்கள், 50 சதவீதம் மானிய விலையில் கிடைக்கிறது' என, மோகனூர் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: மோகனூர் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில் நெல், பயறு, சிறு தானியங்கள், பருத்தி உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிர்களில் லாபம் சம்பாதிக்க உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்களை பயன்படுத்தலாம். இந்த உரங்கள் பயிர்கள் தழைச்சத்தை நிலை நிறுத்தவும், மணிச்சத்தை பயிர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றித் தரும் பணிகளை

செய்கிறது. நெல், பயறு வகைப்பயிர்கள், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, காய்கறிப் பயிர்கள் மற்றும் இதர தோட்டப் பயிர்களுக்கும் இந்த உரங்கள் சிறந்த பலனளிக்கின்றன. வேளாண்மையில் உயிர் உரங்கள் முக்கியமான இடுபொருளாகப் பயன்படுகின்றன. பயிர் வளர்ச்சி மற்றும் விளைச்சலை அதிகப்படுத்துவது மட்டுமின்றி, மண் வளத்தை மேம்படுத்தி, மண்ணின் நலத்தை காக்கின்றன. மேலும், நீர்ம அசோஸ்பைரில்லம் பயிருக்கு பச்சை நிறத்தை அளித்து, பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. நீர்ம பாஸ்போபாக்டீரியா மணிச்சத்தை பயிர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றித் தரும் பணியை செய்கிறது. சில பூஞ்சான எதிர்ப்பு பொருட்களை உற்பத்தி செய்து அவைகளின் வளர்ச்சியைத் தடுத்து பயிர்களைப் பாதுகாக்கிறது. வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் (எண்ணெய் வித்து) திட்டத்தின் கீழ், 50 சத மான்ய விலையில் கிடைக்கிறது. இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

## ரூ.5 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த பருத்தி ஏலத்தில், 5 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 350 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதில், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,619, குறைந்த பட்சம், 3,976 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 4,659 குறைந்த பட்சம், 4,013 ரூபாய்க்கு ஏலம் போனது.

நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 350 மூட்டை பருத்தி, 5 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**கொய்யா சீஸன்: ரூ.50க்கு விற்பனை**

லாலாபேட்டை: லாலாபேட்டை பகுதியில் கொய்யாப்பழம் வரத்து அதிகரிப்பால், பொது மக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். கொய்யாப்பழம் சீஸன் துவங்கி உள்ளதால், லாலாபேட்டை பகுதிக்கு கொய்யா வரத்து அதிகரித்துள்ளது. பழனி, கொல்லிமலை, துவரங்குறிச்சி போன்ற பகுதிகளில் இருந்து, வியாபாரிகள் கொய்யாப்பழம் வாங்கி வந்து, விற்பனை செய்கின்றனர். மினி ஆட்டோ மூலம் லாலாப்பேட்டை, வல்லம், கிருஷ்ணராயபுரம் ஆகிய இடங்களில் ஒரு கிலோ, 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

**ஆரஞ்சு கிலோ ரூ.140க்கு விற்பனை: குறைந்த விலை முலாம்பழம் தான்**

கரூர்: கரூரில், பழங்கள் விற்பனையில் அதிகபட்சமாக ஆரஞ்சு பழம் கிலோ ரூ.140க்கு விற்பனையாவதால், பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கரூர் பஸ் ஸ்டாண்டு, கோவை ரோடு, திருச்சி ரோடு, ஜவஹர் பஜார், திண்ணப்பா தியேட்டர் ரோடு போன்ற இடங்களில் பழக்கடைகள் அதிகம் உள்ளன. கரூர் பகுதியில் விற்கும் பழங்களின் விற்பனை கிலோவுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை விவரம்: ஆப்பிள் கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரை, சாத்துக்குடி கிலோ ரூ.40 முதல் ரூ.50

வரையும், மாதுளை கிலோ ரூ.80, கொய்யா பழம் கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரையும் விற்பனையாகிறது. சீத்தாப்பழம் கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரையும், முலாம்பழம் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையும், பச்சை திராட்சை கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரையும், கருப்பு திராட்சை கிலோ ரூ.60 முதல் ரூ.75 வரையும், நெல்லிக்காய் கிலோ ரூ.80க்கு விற்கப்படுகிறது.

### கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையின் நொய்யல் கால்நடை மருந்தகம் சார்பில் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நொய்யல், மறவாபாளையம், சேமங்கி முத்தனூர் ஆகிய பகுதிகளில் நடந்தது. முகாமிற்கு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். நொய்யல் கால்நடை மருத்துவர் தமிழரசன் வரவேற்றார். கோம்பு பாளையம் பஞ்சாயத்து தலைவர் பசுபதி, கோமாரிநோய் தடுப்பூசி முகாமை துவக்கி வைத்தார். முாகமில் உதவியாளர் மாலதி, ஆய்வாலர் நாகராஜ் ஆகியோர் கொண்ட குழுவினர், பசு மற்றும் எருமை மாடு, கன்று குட்டிகளுக்கு கோமாரி நோய் தடுப்புசி போட்டனர். 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

### விதை கிராமம் பற்றிவிவசாயிகளுக்கு பயிற்சி

திண்டுக்கல்:ஒட்டன்சத்திரம் அம்பிளிக்கையில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை(அட்மா) திட்டத்தின் கீழ் விதை கிராமம் பற்றி, விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் அருணாசலம், ஊராட்சி தலைவர் ஈஸ்வரி பங்கேற்றனர்.

விவசாய துணை இயக்குனர் தங்கச்சாமி பேசியதாவது: விதை கிராமம் பற்றிய தொழில் நுட்பம், மதிப்பு கூட்டுதல் மூலமாக விற்பனை செய்து

வருமானத்தை உயர்த்தலாம், என்றார். துணை இயக்குனர் பாஸ்கரன், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் பற்றியும், பூச்சி மருந்தை குறைத்து இயற்கை வழி விவசாயத்தை ஊக்கப்படுத்தல் குறித்து எடுத்துரைத்தார். மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் இளையராஜா பயறு வகை பயிர்கள் சாகுபடி, நீர் மேலாண்மை, உர நிர்வாகம் பற்றிய தொழில் நுட்பங்களை விளக்கினார். சான்று விதை உற்பத்தி பற்றி வேளாண்மை அலுவலர் சின்னசாமி, தொழில் நுட்ப மேலாளர் செல்வநாயகம், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேந்திரன் பேசினர்.

**விற்பனை மையங்களில் விதை நெல் தேக்கம்**



சாணார்பட்டி:சாணார்பட்டி வட்டாரத்தில் போதிய மழை இல்லாததால் வேளாண்மை விற்பனை மையங்களில் விதை நெல் தேக்கமடைந்துள்ளது. இந்த வட்டாரத்தில் அதிகாரிபட்டி, சாணார்பட்டி என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு வேளாண்மை விற்பனை மையங்கள் செயல்படுகின்றன. இரு பகுதிகளிலும் சேர்த்து 2500 ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி நிலம் உள்ளது. பருவ மழை போதிய அளவு பெய்யாததால் கடந்த ஆண்டில் 1250 ஏக்கர் பரப்பு நிலத்தில் மட்டுமே சாகுபடி நடந்தது. நன்றாக மழை பெய்யும் பட்சத்தில் 10 டன் வரை விதை நெல் விற்பனையாகும். தற்போது சம்பா பருவம் துவங்க உள்ளதையடுத்து சாணார்பட்டியில் 7 டன், அதிகாரிபட்டியில் 5 டன் விதை நெல் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. ஆனால் மழை இல்லாதாதல் கண்மாய்களுக்கு தண்ணீர் வரத்து இல்லை.

பெரும்பாலான விவசாய கிணறுகள் ஏற்கனவே வறண்டு விட்டன. கால்நடை தீவனங்கள் வளர்ப்பதற்கே விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே விதை நெல் வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இதனால் உற்பத்தி செய்து 9 மாதங்களில் காலாவதியாகக்கூடிய விதை நெல் தேங்கியுள்ளது. சாணார்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன் கூறியதாவது: விற்பனை தாமதமானால் தேவைப்படும் வேறு மையங்களுக்கு விதை அனுப்பி வைக்கப்படும். சீசன் இன்னும் உள்ளதால் மழை தாமதமாக பெய்து, தேவைப்படும் பட்சத்தில் விதை நெல் மீண்டும் விற்பனைக்கு கொண்டு வரப்படும்' என்றார்.

## குறைந்து வரும் சிறுதானிய சாகுபடி




சாணார்பட்டி:உடலுக்கு ஆரோக்கியம் தரக்கூடிய சிறுதானிய வகைகளின் சாகுபடி நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. கேழ்வரகு, கம்பு, சோளம், குதிரைவாலி போன்ற சிறுதானியங்கள் புரதம் மற்றும் நார்ச்சத்து மிகுந்தவைகளாகும். ரத்த அழுத்தம், உடல் சேர்வு, சர்க்கரை உள்ளிட்ட நோய் உள்ளவர்களுக்கு இது சிறந்த உணவாகும். மக்களின் உணவுப் பழக்க வழக்கத்தில் மாற்றம், மழையின்மை உள்ளிட்ட காரணங்களால் சிறுதானிய உற்பத்தியும் குறைந்து வருகிறது. இந்நிலையிலும் அதிகாரிபட்டி, வேல்வார்கோட்டை பகுதிளை சேர்ந்த

விவசாயிகள் சிலர் குறைந்த அளவு போர்வெல் தண்ணீரை கொண்டு கேழ்வரகு சாகுபடி செய்துள்ளனர்.

அதிகாரிபட்டியை சேர்ந்த விவசாயி கணேசன் கூறியதாவது, ""காந்திகிராம வேளாண்மை அறிவியல் மையத்தில் இருந்து கோ-15 ரக விதை வாங்கி பயிர் செய்துள்ளேன். கதிர் நன்றாக விளைந்துள்ளது. மானாவாரியாக விதைக்க ஏக்கருக்கு 4 கிலோ, பாசன முறைக்கு 2 கிலோ போதுமானது. காந்திகிராம வேளாண் அறிவியல் மையத்திற்கு சென்றால் மேலும் விபரங்கள் தெரிந்துகொள்ளலாம்' என கூறினார்.

## திண்டுக்கல் பகுதியில் கனமழை:வெப்பம் தணிந்ததால் மகிழ்ச்சி




திண்டுக்கல்லில் கடந்த 10 நாட்களாக கடுமையான வெயில் வாட்டி வதைத்தது. இரவில் தூங்க முடியாமலும், புழுக்கம் தாங்க முடியாமலும் பொதுமக்கள் அவதிப்பட்டனர். கடந்த இரண்டு நாட்களாக மாலையில் வருவது போல போக்குக்காட்டிய மழை, நேற்று மாலை 5 மணிக்கு பெய்தது. இது மாலை 6.30 மணிவரை ஒன்றரை மணிநேரம் நீடித்தது.

இந்த மழையால் திருமலைசாமிபுரம், இந்திராகாலனி, கக்கன்நகர், கூட்டுறவு நகர், அங்குவிலாஸ் இறக்கம் உட்பட பல இடங்களில் மழை நீர் தேங்கி சிறிது நேரத்தில் வழிந்தோடியது. திடீர் மழையால் நகரில் குளிர்ந்து காற்றுவீசியதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். நகரில் 15 நாட்களுக்கு ஒரு முறை மாநகராட்சி நிர்வாகம் குடிநீர் வினியோகிப்பதால், மழை நீரை பலரும் குடிநீராய் பிடித்தனர்.ஒட்டன்சத்திரம்: நேற்று மாலை 3.15 முதல் ஒரு மணி நேரம் ஒட்டன்சத்திரம், காளாஞ்சிபட்டி, கேதையுறும்பு, சாலைப்புதூர் உள்ளிட்ட கிராமங்களில் கனமழை பெய்தது. மானாவாரி நிலங்களில் முதற்கட்ட உழவுப் பணிகளை தொடங் குவதற்கேற்ற வகையில் இம்மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதேபோல தாண்டிக்குடி மலைப்பகுதியிலும் நல்ல மழை பெய்தது.

**வறட்சியை தாங்கி வளரும் மாதுளை:தேனி விவசாயிகள் அதிக ஆர்வம்**

கம்பம்:திராட்சையில் இருந்து வாழைக்கு தாவிய விவசாயிகள் தற்போது மாதுளைக்கு

தாவத்தயாராகி வருகின்றனர். குறைந்த அளவு தண்ணீர் இருந்தால் போதும் என்பதால் மாதுளை பழச் சாகுபடியில் தேனி மாவட்ட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் மா, கொய்யா, வாழை, திராட்சை உள்ளிட்ட பழ வகைகள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இருந்த போதும் பருவ மழை பொய்க்கும் போது, கிணறுகளில் தண்ணீர் வற்றி பிரச்னை ஏற்படுகிறது.

கட்டுபடியான விலை கிடைப்பதில் சிக்கல்,நோய் தாக்குதல், விளைச்சல் குறைவு போன்றவற்றால் விவசாயிகள் சிக்கலை சந்திக்கின்றனர். குறிப்பாக திராட்சை சாகுபடியாளர்கள் கடும் நெருக்கடியை

சந்திக்கின்றனர். திராட்சையில் இருந்து வாழைக்கு மாறினர். ஆனால் வாழைக்கு கட்டுபடியான விலை கிடைக்காததால் தற்போது மாதுளைக்கு மாறத்தயாராகி வருகின்றனர். மாதுளை சாகுபடிக்கு தண்ணீர் அதிகமாக தேவையில்லை. வறட்சியை தாங்கி வளரக்கூடியது. நடவு செய்த இரண்டாவது ஆண்டின் இறுதியில் பலன் கொடுக்க ஆரம்பிக்கும். தொடர்ந்தாற்போது குறைந்தது 10 ஆண்டுகளுக்கு பலன் தரும்.

ஒரு ஏக்கரில் ரூ. 3 லட்சம் வரை கிடைக்கும். பராமரிப்பு செலவுகள் பிற பயிர்களை ஒப்பிடும் போது மிக குறைவாகும். ஒரு ஏக்கருக்கு ரூ. ஒரு லட்சம் வரை செலவாகும்.

தோட்டக்கலைத்துறையினர் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் கூடலூர், உத்தமபாளையம், காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட சில ஊர்களில் விவசாயிகள் மாதுளை சாகுபடியில் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். சிலர் சாகுபடி செய்து மகசூல் எடுத்து நல்ல லாபம் சம்பாதித்துள்ளனர். மாதுளை சாகுபடி பரப்பு வரும் காலங்களில் தேனி மாவட்டத்தில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இப்போதைக்கு 100 ஏக்கர் வரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது, என்றனர்.

## கோடையிலும் வற்றாத கொம்பூதி கண்மாயில் தண்ணீர்.. தண்ணீர்.. பண்ணை குட்டை மூலம் பயன் பெற்ற கிராமம்




கீழக்கரை : ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகள் தோறும் வறட்சியை தாங்கி, விவசாயத்தை பாதுகாக்கும் வகையில், 428 ஊராட்சிகளில் பண்ணை குட்டைகள் அமைக்க அரசு நிதி ஒதுக்கி உள்ளது. ஒரு பண்ணை குட்டை அமைக்க ஆகும் மொத்த செலவு ரூ.15 ஆயிரம் ஆகும். இத்தொகை முழுவதும் மானியமாக வழங்கப் பட்டு வருகிறது. இதுபற்றி பல ஊராட்சி தலைவர்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததால், பண்ணை குட்டைகள் அமைப்பதற்கு அரசு ஒதுக்கிய நிதி பயன்பாடின்றி முடங்கிக் கிடக்கிறது.

திருப்புல்லாணி ஒன்றியத்திற் குட்பட்ட கொம்பூதி கிராமத்தில் உள்ள கொம்பூதி கண்மாய் 110 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இக்கண்மாய் கரையோரங்களில் புளி, வேம்பு உள்ளிட்ட நிழல் தரும் மரங்கள் வளர்ந்துள்ளன. இக்கண்மாயில் வருடம் முழுவதும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இந்த நீரை பயன்படுத்தி நெல், மிளகாய், மல்லி, எள் உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். அருகிலுள்ள மற்ற கிராம கண்மாய்கள் கோடையில் வறண்டு கிடக்கும் நிலையில், கொம்பூதி கண்மாயில் மட்டும் தண்ணீர் எப்போதும் இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் பண்ணை குட்டைகள் தான்.

இதுகுறித்து கொம்பூதி ஊராட்சித்தலைவர் கிருஷ்ணன் கூறுகையில், ""எங்கள் கிராம மக்களின் பங்கு மற்றும் தானம் அறக்கட்டளை என்ற தொண்டு நிறுவன நிதியுடன் கண்மாயில் பண்ணைக்குட்டைகள் அமைத்துள்ளோம். நூறு நாட்கள் வேலை திட்டத்தின் மூலம் கண்மாய் கரையை பலப் படுத்தி வருகிறோம். விவசாய நிலங்களுக்கு ஊரில் இருந்து பொது நிதி ஏற்படுத்தி, காவலுக்கு ஆள் நியமித் துள்ளோம். இதன்மூலம் ஒவ் வொருவர் நிலத்திற்கும் பிரச்னையில்லாமல் தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. மேலும் அருகில் உள்ள ஊரணியை கம்பி வேலி அமைத்து பாதுகாத்து வருகிறோம். மழை நீரை முறையாக சேமித்தால், வறட்சியையும் எளிதாக தாக்கு பிடிக்கலாம்," என்றார்.

## மீன்பிடி தொழிலாளர் கூட்டமைப்பு கூட்டம்

ராமேஸ்வரம் : ராமேஸ்வரத்தில், தமிழ்நாடு மீன்பிடித் தொழிலாளர் சங்க கூட்டமைப்பு கூட்டம் நடந்தது.அதில் தூத்துக்குடி மீன் ஏலத்தில் அடாவடி கும்பலுக்கு 8 சதவீத கமிஷன் வழங்குவதை கண்டித்த மீனவர் சங்க தலைவர் பார்த்திபனை கொலை செய்தவர்களை கைது செய்ய வேண்டும். தூத்துக்குடி மீன் ஏலத்தை ரத்து செய்ய வேண்டும். பார்த்திபன் குடும்பத்தினருக்கு மாநில அரசு ரூ. 10 லட்சம் நிவாரணம் வழங்கி, அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும், என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் மாநில மீன்பிடித் தொழிலாளர் சங்க பொது செயலாளர் சி.ஆர்.செந்தில், மார்க்சிஸ்ட் கட்சி நிர்வாகிகள் கருணாகரன், சிவா, வடகொரியா பலர் பங்கேற்றனர்.

## மாவட்ட அளவில் 1,665 பண்ணை குட்டை மூலம் மீன்கள் வளர்ப்பு

சிவகங்கை : ""மாவட்ட அளவில் விவசாய நிலங்களில் 1,665 பண்ணை குட்டை அமைத்து மீன் வளர்க்கப் படுகிறது," என விவசாய இணை இயக்குனர் குருமூர்த்தி தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: ஒருங் கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் விவசாயிகளின் பட்டா நிலங்களில் 67 சதவீத மானியத்தில் பண்ணை குட்டை அமைத்து கொடுத்து, 80 சதவீத மானியத்தில் மீன்குஞ்சுகள் வழங்கி மீன் வளர்ப்பு தொழிலை ஊக்கப்படுத்தி, விவசாயிகள் வாழ்வா தாரத்தை மேம்படுத்த திட்டம் செயல் படுகிறது. பண்ணை குட்டை அமைக்க 40 சென்ட் இடம் தேவை. இதன் மூலம் மழை நீர் சேகரிக்கப் படுவதால், நிலத்தடி நீர் மட்டம் உயரும். மாவட்டத்தில் இது வரை 1,665 பண்ணை குட்டைகள் அமைத்துள்ளனர். இதன் மூலம் மீன்வளர்ப்பும் அதிகரிக்கும். ஒரு பண்ணை குட்டையில் 1,200 மீன் குஞ்சுகள் விடப்பட்டு, ஏழு மாதங்களுக்கு பின் நாள் ஒன்றுக்கு 180 கிலோ மீன்கள் எடுக்கலாம். இது விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் தொழில், என்றார்.

## தேவகோட்டையில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

தேவகோட்டை : தேவகோட்டையில் மழை பெய்யாத நிலையில் சித்திரை போல் வெயில் வாட்டி வதைத்தது. இந்நிலையில் நேற்று பகல் முழுவதும் நல்ல மழை பெய்தது. தேவகோட்டை நகரில் வீதி முழுவதும் சாக்கடை,மழைநீர் கலந்து ஓடியது. மேலும் கிராம பகுதியிலும் மழை இல்லாமல் விவசாய பணிகள் மந்தமாக இருந்தது.நேற்று கிராம பகுதியிலும் இந்த மழை பெய்ததை தொடர்ந்து விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்தனர்.

## கோமாரி நோய்: கலெக்டர் ஆய்வு

விருதுநகர் : விருதுநகர் அருகே பட்டம் புதூரில் நடந்த கோமாரி நோய் தடுப்பூசி முகாமை கலெக்டர் ராஜாராமன் ஆய்வு செய்தார்.மாவட்டத்தில் செப்.1முதல் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்து வருகிறது. இந்தாண்டு 2.24 லட்சம் பசு, எருமைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக 44 குழுக்கள் அமைக்கப்பட்டு தினமும் 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஊசி போட முடிவு செய்யப்பட்டு பணிகள் நடந்து வருகிறது. பட்டம்புதூர், இனாம் ரெட்டியபட்டி பகுதிகளில் நடந்த கோமாரி நோய் தடுப்பூசி முகாமை ஆய்வு செய்து மக்களிடம் கால்நடைளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, குடற்புழு நீக்க மருந்து போடுவதன் அவசியம் பற்றி விளக்கினார். உடன் கால்நடைதுறை இணை இயக்குனர் டாக்டர் சுகுமார் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில், ஆங்காங்கே பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

நகரின் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரியாக இருக்கும். வெப்பசலனம் தொடர்ந்து நீடிப்பதால், தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமையன்று ஆங்காங்கே பலத்த மழை பெய்யும்.

கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் பரவலாக மழை பதிவாகியுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் அதிகபட்சமாக 110 மி.மீட்டர் மழை பதிவாகியது. அதற்கு அடுத்தபடியாக, விராலிமலை, மதுராந்தகத்தில் 80 மி.மீ, செஞ்சியில் 70 மி.மீ, திருக்கோயிலூரில் 60 மி.மீ, திண்டிவனம், போளூர், மயிலம், விருதுநகர் ஆகிய இடங்களில் 50 மி.மீட்டர் மழை பதிவாகியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## காவிரி டெல்டா மாவட்டங்களில் 10 நெல் உலர்த்தும் களங்கள்: தமிழக அரசு அறிவிப்பு

காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ரூ.80 லட்சத்தில் 10 நெல் உலர்த்தும் களங்கள் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.

பேரவையில் உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகள் மீது வியாழக்கிழமை நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசும்போது உணவுத் துறை அமைச்சர் ஆர்.காமராஜ் வெளியிட்ட அறிவிப்புகள்:

காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல்லின் ஈரப்பதம், கொள்முதல் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக உள்ளது. எனவே, அறுவடையாகும் நெல்லை உலர்த்த ஏதுவாக, சொந்தக் கட்டடங்களில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கூடுதலாக 10 நெல் உலர்த்தும் களங்கள் ரூ.80 லட்சம் செலவில் அமைக்கப்படும்.

நெல் தூற்றும் இயந்திரங்கள்: விவசாயிகளின் நலன் கருதி, காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல்

நிலையங்களுக்கு 100 நெல் தூற்றும் இயந்திரங்கள் ரூ.25 லட்சம் செலவில் வழங்கப்படும்.

உணவு தானியங்கள் பராமரிப்பு: தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைத்துள்ள தானியங்களை பூச்சிகளின்றி பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, 54 கிடங்குகளில் 162 நவீன புற ஊதா ஒளிப்பொறிகள் (Ultra Violet Light Traps) ரூ.8 லட்சம் செலவில் அமைக்கப்படும்.

ரூ.2.50 கோடியில் சீரமைப்புப் பணிகள்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமான 68 கிடங்குகள் 40 ஆண்டுகளுக்கும் மேல் பழைமையானவை. இந்தக் கிடங்குகளில் பழுதடைந்த மேற்கூரை, கிடங்கின் சுற்றுச்சுவர், தரைதளம் உள்ளிட்டவை சீரமைக்க வேண்டியது அவசியமாகிறது. முதல் கட்டமாக, 10 கிடங்குகளிலும், 5 நவீன அரிசி ஆலைகளிலும் சீரமைப்புப் பணிகள் ரூ.2 கோடியே 50 லட்சத்தில் மேற்கொள்ளப்படும்.

**விதை விற்பனை மையங்களில் சென்னை அதிகாரிகள் குழு ஆய்வு**

காஞ்சிபுரத்தில் உள்ள விதை விற்பனை மையங்களை சென்னை விதை பரிசோதனை துணை இயக்குநர் தலைமையிலான அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தனியார் விதை விற்பனை மையங்களில் தரமான விதை கிடைப்பதில்லை என்று கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் புகார் செய்தனர். இதைத் தொடர்ந்து தனியார் விதை விற்பனை மையங்களை சோதனையிட மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் உத்தரவிட்டார்.

இதன்பேரில், சென்னை விதை பரிசோதனை துணை இயக்குநர் ஸ்டேன்லி தலைமையிலான அலுவலர் குழுவினர் காஞ்சிபுரம் பகுதிகளில் உள்ள விதை விற்பனை மையங்களில் அண்மையில் ஆய்வு

செய்தனர். அப்போது தரமான விதை விற்பனை செய்யப்படுகிறதா என்று அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.
தரமற்ற விதை விற்பனை செய்தால் விற்பனை நிலையங்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். அதன்பிறகு விதை மாதிரி எடுத்து காஞ்சிபுரத்தில் உள்ள விதை பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி முளைப்புத் திறன் தெரிந்து விற்பனை செய்யும்படி விதை விற்பனை நிலைய உரிமையாளர்களிடம் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

**பயறு வகை சாகுபடி செய்ய வேளாண் துறை மானியம்**

பழனி சுற்று வட்டாரப் பகுதியில் பயறு வகைகளை சாகுபடி செய்ய வேளாண் துறை மானியம் அறிவித்துள்ளது.

இது குறித்து, வேளாண் உதவி இயக்குநர் சுருளியப்பன் தெரிவித்துள்ளதாவது: பழனி வட்டாரத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், பயறு வகை விதைகள் கிலோ ரூ. 25 வீதம் 5 ஆயிரம் கிலோ வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திடல் அமைத்திட, கணக்கன்பட்டி, கோம்பைப்பட்டி பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும், பயறு வகை தொகுப்பு திடல், ஒரு ஏக்கருக்கு வேண்டிய விதைகள், உயிர் உரம், நுண் உரங்கள், களைக்கொல்லி ஆகியன வாங்க சுமார் ரூ. 4 ஆயிரம் வழங்கப்படவுள்ளது. முதல் பயிராக மக்காச்சோளமும், இரண்டாம் பயிராக உளுந்து வகை பயறு சாகுபடி செய்யவும், 100 விவசாயிகள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 4 ஆயிரம் என இருவகைப் பயிருக்கு ரூ. 8 ஆயிரம் வழங்கப்படவுள்ளது. தேவைப்படும் விவசாயிகள், வேளாண்

அலுவலர் சின்னமாணிக்கத்தை 91505-78262 என்ற எண்ணில் தொடர்புகொண்டு பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

**ஒட்டன்சத்திரத்தில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

ஒட்டன்சத்திரத்தில் வியாழக்கிழமை பெய்த மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், மூலச்சத்திரம், கம்பிளிநாயக்கன்பட்டி, செம்மடைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வியாழக்கிழமை கனமழை பெய்தது. இந்த மழையால், வெயிலின் தாக்கம் குறைந்து, குளுமை நிலவியதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும், மக்காச்சோளம், பருத்தி, மொச்சை, சுண்டக்கடலை போன்ற பயிர்களை மானாவாரியாக பயிர் செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**தேவகோட்டையில் பலத்த மழை**

தேவகோட்டை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

தேவகோட்டையில் கடந்த சில நாள்களாகவே வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில் வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

தேவகோட்டை பேருந்துநிலையம், ஓத்தக்கடை, ராம் நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மழை

பெய்தது. மேலும் மாலையிலும் பலத்த மழை பெய்ததால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணறுகளில் தண்ணீர் குறைவாக காணப்பட்ட நிலையில், மழை பெய்து குளிர்ச்சி நிலவியதால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**தேவகோட்டையில் பலத்த மழை**

தேவகோட்டை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

தேவகோட்டையில் கடந்த சில நாள்களாகவே வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில் வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

தேவகோட்டை பேருந்துநிலையம், ஓத்தக்கடை, ராம் நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மழை பெய்தது. மேலும் மாலையிலும் பலத்த மழை பெய்ததால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணறுகளில் தண்ணீர் குறைவாக காணப்பட்ட நிலையில், மழை பெய்து குளிர்ச்சி நிலவியதால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 15 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு ஆகஸ்ட் 9ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த ஒரு வார காலமாக பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 16 ஆயிரம் கன அடியாக இருந்தது. புதன்கிழமை மாலை தண்ணீர் திறப்பு நொடிக்கு 15 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 89.13 அடியாக இருந்தது. அணைக்கு வரும் நீரின் அளவு 4,020 கன அடியாகச் சரிந்துள்ளது. நீர் இருப்பு 51.66 டி.எம்.சி.

கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து நொடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத காரணத்தாலும், தமிழகத்துக்கு கர்நாடகம் தண்ணீர் திறக்காததாலும், மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

**உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி பயிற்சி**

செந்துறையில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி குறித்த பண்ணை மகளிர் பயிற்சி தளவாய் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வேளாண்மையில் தற்போது ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் சுற்றுச்சூழல் பாதிப்பு, மண்வள பாதிப்பு உயிரினங்களின் ஆரோக்கிய குறைபாடு ஆகியவை ஏற்படுகிறது. நஞ்சில்லா உணவு உற்பத்தியை மேற்கொள்ள ரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாட்டினை தவிர்த்து தீமை செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்திட உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளைப் பயன்படுத்திட வேண்டும்.

உயிரியல் காரணிகளை பண்ணை அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு எளிதில் கிடைப்பதற்காக அரியலூர் மாவட்டத்தில்

அரியலூர், செந்துறை, ஐயங்கொண்டம் மற்றும் தா.பழூர் வட்டாரங்களில் 10 பண்ணை மகளிர் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்யும் பயிற்சி தளவாய் மற்றும் அயன்தத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் 30 பேருக்கு செந்துறை வட்டாரம், தளவாய் கிராமத்தில் வேளாண்மைத் துறை மூலம் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி உதவி மூலமாக நடத்தப்பட்டது.

பயிற்சிக்கு அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் நா. பன்னீர்செல்வம் தலைமை வகித்து பேசியது:

உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை தங்களது கிராமத்திலேயே உற்பத்தி செய்து தங்களது தேவைபோக மீதம் உள்ளவற்றை அருகில் உள்ள கிராம விவசாயிகளுக்கு வழங்கி குழுக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ள வேண்டும்.

இந்த உயிரியியல் கட்டுப்பாட்டு காரணிகளை உற்பத்தி செய்யும் குழுக்களுக்கு ரூ. 87,500 மதிப்புள்ள உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் வேளாண்மைத்துறை மூலம் அரசு உதவிகளாக வழங்கப்படும். இந்த திட்டப்பணி 5 ஆண்டுகள் வேளாண்மைத் துறை கண்காணிப்பில் தொடர்ந்து நடைபெறும் என்றார்.

நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்ட தரக்கட்டுபாட்டு வேளாண்மை உதவி இயக்குநர் க. முரளிதரன், செந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ். ராஜசேகரன், வேளாண்மை அலுவலர்கள் கலைச்செல்வி, துரைராசு உள்ளிட்டோர் பேசினர்.

**அறந்தாங்கியில் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஏகபெருமாளூர் கிராமத்தில் வேளாண் துறை மூலம் நடைபெற்ற நேரடி இயந்திர நெல்விதைப்புப் பணிகளை ஆட்சியர் சு. கணேஷ் வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

நேரடி இயந்திர நெல்விதைப்பு தொழில்நுட்பம் நிகழ் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதால், பாஸ்கரன் என்ற விவசாயி வயலில் நெல் விதைப்புப் பணியில் இருந்த அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குநா் தியாகராஜன், வேளாண் அலுவலா் இளஞ்செழியன், வேளாண் உதவி அலுவலா்கள் சந்திரசேகரன், மகேந்திரன் ஆகியோரிடம் திட்ட அமலாக்கம் செய்யும் முறையை கேட்டறிந்ததோடு, இயந்திர நெல் விதைப்புப் பணிகளையும் ஆய்வு செய்தார்.

இந்தப் பகுதியில் புதிதாக அண்ணா 4 ரகம் விதைக்கப்படுவதால், புதிய ரகத்தின் குணநலன்களை கேட்டறிந்த ஆட்சியர், தன்னுடன் வந்த ஏகனிவயல் ஊராட்சித் தலைவா் நைனாமுகமதுவை விதை விதைக்கும் கருவியை மானியத்தில் வாங்க பாிந்துரைத்தார். அப்போது, விவசாயிகளுக்கு மானியம் அவா்களது வங்கிக் கணக்கிலேயே சோ்க்கப்படும் என்றும் தொிவித்தார்.

மேலும், நெல் விதைக்கும் கருவியை தயாரித்த பெப்சிகோ நிறுவனம் குறித்து கேட்டதோடு, இயந்திரம் மூலம் நெல் விதைப்பை மேலும் விரிவுபடுத்தவும், அக்கிராமம் முழுவதையும் நேரடி இயந்திர நெல் விதைப்பில் கொண்டு வர வேண்டுமெனவும் அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குநருக்கு ஆட்சியர் அறிவுரை வழங்கினார். மேலும், இயந்திர நெல் விதைப்பு பணியில் இருந்த டிராக்டர் ஓட்டுநரைப் பாராட்டி சால்வை அணிவித்தர். அதோடு, தற்போது வழங்கப்பட்டுள்ள புதிய விதைக்கும் கருவிகளை மானிய விலையில் விநியோகிக்க நடவடிக்கை

எடுக்க வேண்டும் என வேளாண் துறை அலுவலா்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

முன்னதாக, அறந்தாங்கி அருகேயுள்ள ஏகனிவயல், மணமேல்குடி ஆகிய பகுதிகளில் 100 நாள் வேலை திட்டத்தை ஆட்சியர் ஆய்வு செய்தார்.

வட்டார வளாச்சி அலுவலர்கள் ஜானகிராமன், சி. செந்தில்வேல் உள்ளிட்டோர் ஆய்வின்போது உடனிருந்தனர்.

**"பொருளாதார வளர்ச்சியில் கால்நடை வளர்ப்புக்கு பெரும் பங்குள்ளது'**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை துறையும், கால்நடை வளர்ப்பும் பெரும் பங்கு வகிக்கின்றன என்றார் திருவாரூர் ஆட்சியர் எம். மதிவாணன்.

திருவாரூரில் புதன்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைந்த மண்வள மேம்பாடு மூலம் பசுந்தீவனம் மற்றும் கால்நடை உற்பத்தித் திறனை பெருக்குதல் குறித்த கருத்தரங்கை தொடக்கிவைத்து மேலும் அவர் பேசியது: கால்நடைகளின் இன விருத்தி மற்றும் உற்பத்தித் திறன் அவை உட்கொள்ளும் தீவனங்களை பொருத்தே அமைகிறது. அடாா் தீவனம், பசுந்தீவனம், உலாா் தீவனம், இதர தீவனத்தில் உள்ள சத்துக்களின் அளவைப் பொருத்தே உற்பத்தித் திறன் இருக்கும்.

இத்திட்டத்தின் மூலம் மண், பசுந்தீவனம் மற்றும் கால்நடைகளுக்கு இடையே உள்ள சத்து சுழற்சி மூலம் கால்நடை உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதைப் பற்றி விவசாயிகளுக்கும், கால்நடை வளா்ப்பவர்களுக்கும் விழிப்புணா்வை ஏற்படுத்துவது திட்டத்தின் நோக்கம்.

மண் வளமும், மனித வளமும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாதது. இந்திய பொருளாதார வளா்ச்சிக்கு வேளாண்மையும் அதனுடன் இணைந்த கால்நடை வளா்ப்பும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மண்ணிற்கு

ஏற்றவாறு பசுந்தீவனப் பயிர்களை பயிட வேண்டும். அவ்வாறு பயிரிடுவதால் கால்நடை வளா0ப்பு உற்பத்தி செலவை குறைத்து அதிக வருவாய் பெற முடியும். இத்திட்டத்தின் மூலம் மண்வளம் பாதுகாக்கப்படுவதோடு, குறைந்த செலவில் திருப்திகரமான மகசூல் கிடைக்கிறது. பால், இறைச்சி உற்பத்தி அதிகரிக்கப்படுகிறது என்றார் மதிவாணன்.

**முள்ளங்கனாவிளை ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பு முகாம்**

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட முள்ளங்கனாவிளை ஊராட்சியில் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை கட்டுப்படுத்தும் தடுப்பு முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு ஊராட்சி 5ஆவது வார்டு உறுப்பினர் ஜஸ்டஸ் தலைமை வகித்தார். வார்டு உறுப்பினர் மலையப்பன் முன்னிலை வகித்தார். கிள்ளியூர் ஒன்றிய கால்நடை மருத்துவர் சஜயன் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தார். இதில், கால்நடை ஆய்வாளர் கிருஷ்ணபிரசாத், உதவியாளர் மந்திரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சாத்தான்குளத்தில் திடீர் மழை**

சாத்தான்குளத்தில் வியாழக்கிழமை பிற்பகலில் திடீரென மழை பெய்தது. இதையொட்டி குளர்ந்த காற்று வீசியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.சாத்தான்குளம் பகுதியில் கடந்த சில மாதங்களாக கடும் வெயில் அடித்து வந்தது. இதனால் பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டனர்.இந்நிலையில் வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணி அளவில் திடீரென மழை பெய்தது. இந்த மழை சுமார் 1மணி நேரம் நீடித்தது. இதனால் சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதையடுத்து, குளிர்ந்த காற்று வீச தொடங்கியதையொட்டி பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**மாவட்டத்தில் இடி, மின்னலுடன் பலத்த மழை: விழுப்புரத்தில் 105 மி.மீ. பதிவு**

மாவட்டத்தில் புதன்கிழமை நள்ளிரவில் இடியுடன் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக விழுப்புரத்தில் 105 மி.மீ. மழை பதிவானது.

விழுப்புரம் மாவட்டத்தில் நள்ளிரவில் மழை விடிய விடிய நீடித்தது. மழையின்போது இடியும், மின்னலும் அதிகம் காணப்பட்டன.

விழுப்புரம் பெருந்திட்ட வளாகம், சுதாகர் நகர் உள்ளிட்ட பகுதிகளில் குடியிருப்புகளை தண்ணீர் சூழ்ந்துள்ளது.

கீழ்பெரும்பாக்கம் தரைப் பாலத்தில் அதிக அளவு தண்ணீர் தேங்கி நின்றதால் அவ் வழியாக வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்பட்டது. இவ் வழியாக வந்த சொகுசுக் கார் ஒன்று தண்ணீரில் சிக்கியது. பொதுமக்கள் உதவியுடன் நீண்ட நேரம் போராடி காரை மீட்டனர்.

நகரில் உள்ள அரசு வங்கி ஒன்றில் பணம் வைக்கும் பாதுகாப்பு அறைக்குள் வெள்ளநீர் புகுந்தது. இதனால் பாதுகாப்புப் பணியில் இருந்த பெண் போலீஸார் நீண்ட நேரம் நின்றபடியே பணிகளை மேற்கொண்டனர். மழைநீர் உள்ளே புகுந்ததில் சில கோப்புகள் நனைந்தன.

இதேபோல, திண்டிவனம், திருக்கோவிலூர், செஞ்சி பகுதியிலும் பலத்த மழை பெய்தது. பல்வேறு இடங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் ஏரிகளுக்கு மழைநீர் வரத்து அதிகரித்துள்ளது.

மரக்காணம் பகுதியில் லேசான மழை காரணமாக உப்பளங்களில் நீர் தேங்கியுள்ளது. மழைக்காலம் நெருங்குவதால் குறைந்த அளவு உப்பு

உற்பத்தியே நடைபெற்று வந்தது. அதனால் உப்பளங்களில் இம் மழையால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை.

மாவட்டத்தில் மழையளவு: அதிகபட்சமாக விழுப்புரத்தில் 105 மி.மீ, மழை பதிவானது. செஞ்சி-73 மி.மீ, திருக்கோவிலூர்-58 மி.மீ, திண்டிவனம்-55 மி.மீ, வானூர்-22 மி.மீ, சங்கராபுரம்-3 மி.மீ, கள்ளக்குறிச்சி-3 மி.மீ, மரக்காணம் 5 மி.மீ என்ற அளவில் மழையளவு பதிவானது. மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இம் மழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

பல இடங்களில் அதிகாலையில் மின்சாரம் மீண்டும் வந்தது. இதனால் பொதுமக்களுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது.

செஞ்சி: விழுப்புரத்துக்கு அடுத்தபடியாக செஞ்சியில் அதிகபட்சமாக 73 மி.மீ. மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

புதன்கிழமை இரவு 11 மணியளவில் அளவில் செஞ்சிப் பகுதியில் பலத்த இடி, மின்னலுடன் மழை பெய்ததது. இம் மழை விடியும் வரை பெய்தது.

நல்லாண்பிள்ளைபெற்றாள் கிராமத்தில் தோமாஸ் என்பவரின் பனை மரத்தில் இடி விழுந்து அருகில் இருந்த மாட்டுக் கொட்டகை தீயில் எரிந்தது. கொட்டகையில் கட்டியிருந்த கன்றுக்குட்டி உயிரிழந்தது.

இதேபோல, அவலூர்பேட்டையிலும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. கரும்பு, மணிலா இவைகளுக்கு உயிர் கொடுத்தது இம் மழை என்றனர் விவசாயிகள். சுற்றுப்புற கிராமங்களிலும் மழை பரவலாக பெய்திருந்தது.

**மாவட்டத்தில் பரவலாக மழை**

கடலூர் மாவட்டத்தில் புதன்கிழமை இரவில் பரவலாக மழை பெய்தது.

மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக இரவு நேரத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. எனினும், பகல் நேரத்தில் வெயிலின் தாக்கமும் அதிகமாகவே உள்ளது. இந்நிலையில், புதன்கிழமை இரவு கடலூரிலும், மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

கடலூரில் பெய்த மழையினால் கடலூர்-திருப்பாதிரிபுலியூர் ரயில்வே சுரங்கப் பாதையில் தண்ணீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் சுமார் 2 கி.மீ. தூரம் சுற்றிச் செல்லும் நிலை ஏற்பட்டது. வியாழக்கிழமை காலை

8 மணி நிலவரப்படி பெய்த மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்): கடலூர் 39.20, தொழுதூர் 38, பண்ருட்டி 5.10, கீழசெருவாய் 10, வானமாதேவி 32.20, காட்டுமயிலூர் 22, வேப்பூர் 6, லாக்கூர் 47.30.

**மீண்டும் வெங்காய பூதம்**

வெங்காயத்தின் விலை உயர்வால் நடுத்தர வர்க்கத்தினர் தங்கள் குடும்ப பட்ஜெட்டை சமாளிக்க முடியாமல் திணறி வருகின்றனர். கடந்த ஜுலை மாதத்தின் தொடக்கத்தில் கிலோ ரூ.25-க்கு விற்றுவந்த வெங்காயம், பின்னர் கிலோ ரூ.60 என அதிரடியாக உயர்ந்தது. அடுத்து மளமளவென விலை ரூ.80-ஆக அதிகரித்தது. வெங்காயம் மொத்த விற்பனைக்கு பெயர்பெற்ற மகாராஷ்டிர மாநிலம், லஸால்கான் சந்தையில் மொத்த விலை எட்ட முடியாத உயரத்தைச் சென்றடைந்துள்ளதன் எதிரொலியாக, சில்லறை விற்பனைச் சந்தையிலும் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வெங்காயத்தின் தேவையைவிட சந்தைக்கு வரத்து குறைவாக இருப்பதால் இன்னும் சில மாதங்களுக்கு விலை குறைய வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது.

மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா மாநிலத்தின் ஒரு பகுதியில்தான் வெங்காயம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. பொதுவாக ரஃபி பருவத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம்தான்

இருப்பு வைக்கப்பட்டு செப்டம்பர் வரை விற்பனை செய்யப்படும். கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் பருவம் தவறி பெய்த மழை, சூறாவளி காரணமாக இந்த மாநிலங்களில் வெங்காய உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டது. இதனால், கடந்த ஆண்டைவிட மூன்றில் ஒரு பங்கு மட்டுமே சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளது. மேலும், தேவையான அளவு மழை இல்லாததால் காரீஃப் பருவத்துக்கான வெங்காய சாகுபடியும் பாதிக்கப்பட்டுள்ளதாக மொத்த விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். வெங்காயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை அதிகரித்துள்ளதால் விலையைக் குறைக்கவும், போதுமான அளவு சந்தையில் வெங்காயம் கிடைக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. அதாவது, வெங்காய ஏற்றுமதியைத் தடுக்க அதற்கான ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு 425 டாலரில் இருந்து 700 டாலராக மத்திய அரசு அதிகரித்துள்ளது.

அதுமட்டுமல்லாமல், ஆப்கானிஸ்தான், எகிப்து போன்ற நாடுகளிலிருந்து 10 ஆயிரம் டன் அளவுக்கு வெங்காயத்தை இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளது. இதுதவிர, தனியார் வர்த்தகர்களும் வெங்காயத்தை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் கீழான பட்டியலில் வெங்காயமும் கொண்டுவரப்பட்டுள்ளது. வெங்காயத்தை வியாபாரிகள் எவ்வளவு இருப்பு வைக்கலாம் என்பதை முடிவு செய்யவும், பதுக்கல்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் மாநில அரசுக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. வெங்காயத்தின் விலை உயரத் தொடங்கிய உடனேயே வியாபாரிகள்

அதனை பதுக்கத் தொடங்கியதும்கூட விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணமாகும்.

பதுக்கல்காரர்களுடன் அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதால் மத்திய அரசின் நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பதுதான் உண்மை.

வெங்காயத்தின் விலை கண்ணீரை வரவழைத்தாலும், மகாராஷ்டிரத்தில் மாட்டு வண்டியில் விற்பனைக்கு வைத்திருந்த 700 கிலோ வெங்காயம் காணாமல் போய்விட்டதாக ஒரு வியாபாரியும், குடோனில் இருந்த இரண்டாயிரம் கிலோ வெங்காயம் திருட்டு போய்விட்டதாக மற்றொரு வியாபாரியும் கூறிய தகவல்கள் செய்தியாக வெளிவந்துள்ளது சிரிப்பைத்தான் வரவழைக்கின்றன.

வெங்காயத்தின் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிப்பது முக்கியமல்ல. நீண்டகால அடிப்படையில் இதற்கு தீர்வு காண மத்திய அரசு முன்வர வேண்டும்.

சர்வதேச அளவில் ஒரு ஹெக்டேருக்கு 20 டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்படும் நிலையில், இந்தியாவில் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 15 டன் வெங்காயம் மட்டுமே விளைகிறது. எனவே, உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும்.

வெங்காயம் அழுகும் பொருள் என்பதால் அதனை பத்திரமாகப் பாதுகாத்து பராமரிக்க வேண்டியது அவசியமாகும். எனவே, அதற்கு நவீன கிடங்குகளின் தேவை அதிகரித்துள்ளதை அரசு மனதில் கொள்ள வேண்டும்.

1980-இல் வெங்காய விலை உயர்வைத் தேர்தல் பிரச்னையாக்கி வாகை சூடினார் இந்திரா காந்தி. தற்போது வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கும் சுஷ்மா ஸ்வராஜ், 1998-இல் தில்லி முதல்வராக இருந்தபோது வெங்காய விலை உயர்வு பெரும் பிரச்னையாக உருவெடுத்தது. பா.ஜ.க.

அரசு வியாபாரிகளுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகவும் அப்போது குற்றச்சாட்டு எழுந்தது.

வெங்காய விலை உயர்வால் மக்கள் கொதிப்படைந்ததால் அடுத்த தேர்தலில் அங்கு பா.ஜ.க. ஆட்சியை இழந்து ஷீலா தீட்சித் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டது. வெங்காய விலை உயர்வால் அப்போது ராஜஸ்தானிலும் பா.ஜ.க. ஆட்சியை இழந்தது.

வெங்காயத்தை அதிக அளவில் கொள்முதல் செய்து அதை மானிய விலையில் விற்பனை செய்யும் முயற்சியில் ஆந்திரம், மேற்கு வங்க மாநில அரசுகள் ஈடுபட்டுள்ளன. அதேபோல, தமிழகத்திலும் குறைந்த விலையில் வெங்காயத்தை பசுமைப் பண்ணைக் கடைகள் மூலம் விற்க முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

பிகார் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வெங்காயத்தின் விலை உயர்வு பிரதமர் நரேந்திர மோடிக்கும், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கும் பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு வெங்காயத்தின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும், பதுக்கலைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்காவிட்டால் பிகார் தேர்தலில் மோடியின் கனவைத் தகர்ப்பதில் வெங்காயமே முக்கிய கருவியாகிவிடக் கூடும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**ரூ.6 ஆயிரம் கோடி வங்கிக்கடன் வழங்க நடவடிக்கை; தமிழகம் முழுவதும் புதிதாக 10 ஆயிரம் சுயஉதவி குழுக்கள்; இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று ஜெயலலிதா அறிவிப்பு**



சென்னை,

சட்டசபையில் முதல்-அமைச்சர் ஜெயலலிதா, 110 விதியின் கீழ் நேற்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

வீட்டுத் தோட்டம்

ஊரகப் பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், தனி நபர் இல்லத்தில் பலன் தரும் பழக்கன்றுகள், மரக்கன்றுகள் வளர்த்திட வழிவகை செய்யும் நோக் கிலும், 2015-16-ம் ஆண்டில் 54 ஆயிரம் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட பயனாளிகள் மற்றும் 60 ஆயிரம் பசுமை வீடுகள் திட்ட பயனாளிகள் என மொத்தம் ஒரு லட்சத்து 14 ஆயிரம் பயனாளிகளின் இல்லங்களில், வீட்டுத் தோட்டம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

இதற்கென ஒவ்வொரு பயனாளிக்கும் 4 பழக் கன்றுகள் அல்லது மரக் கன்றுகள் வழங்கப்படும். இந்த மரக்கன்றுகளை பயனாளிகளே தங்கள் தேவைக்கேற்ப தெரிவு செய்ய வாய்ப்பு அளிக்கப்படும். இதற்கென மரக் கன்றுகள் பெறுவது, தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட தொழிலாளர்கள் மூலம் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து இல்லத் தோட்டங்களில் மரங்கள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சுய வேலைவாய்ப்பு பயிற்சி

நடப்பு ஆண்டு முதல் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சில கூறுகளான சமூக திரட்டு மற்றும் சமுதாய நிறுவன மேம்பாடு, திறன் வளர்ப்பு, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சிகள் மற்றும் சுய வேலை வாய்ப்பு பயிற்சிகள் ஆகிய

செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

ரூ.58 கோடி அமுத சுரபி நிதி

சுய உதவிக் குழுக்கள் தங்களது வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெரும்பாலும் வங்கிக் கடனையே சார்ந்துள்ளன. மேலும், சுய உதவிக் குழுக்களுக்கு நுகர்வு அல்லது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி உதவி தேவைப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு எனது தலைமையிலான அரசு சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் 700 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சிறு கடன்கள் வழங்குவதற்காக 58 கோடி ரூபாயினை அமுத சுரபி நிதியாக நடப்பாண்டில் தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கும்.

கிராமப்புறங்களில் ஒரே தொழிலை மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட குழுவிற்கு தலா 1 லட்சம் ரூபாய் வீதம் 1500 ஒத்த தொழில் குழுக்களுக்கு 15 கோடி ரூபாய் நிதி உதவி தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

10 ஆயிரம்சுய உதவிக் குழுக்கள்

கிராமப்புறங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறு தொழில் செய்து வருவாய் ஈட்டி வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களுக்கு வட்டியில்லா கடன் அளிக்கும் வகையில் 600 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் வீதம் 12 கோடி ரூபாய் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கப்படும். இது மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறிய தொழில்களை

தொடங்கி வாழ்வாதாரம் பெற வழி வகுக்கும்.

இதுவரை சுய உதவிக்குழுவில் உறுப்பினராக இல்லாத ஆதரவற்றோர், ஏழைகள் மற்றும் நலிவுற்றோர்களைக் கொண்டு 10 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் இந்த ஆண்டு அமைக்கப்படும். இந்த சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

ரூ.6 ஆயிரம் கோடி வங்கிக் கடன்

சுய உதவி குழுக்களுக்கு போதுமான கடன் உதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகள் மூலம் ஏற்படுத்தி தருவதன் வாயிலாக பெண்களை பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி கடன் சுமைகளில் இருந்து விடுபட வழிவகை செய்யப்படுகிறது. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையில் கடந்த 4 ஆண்டுகளில் அவர்களுக்கு 20,270 கோடி ரூபாய் கடனாக வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டிலும் சுய உதவிக் குழுக்களுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், கிராமங்கள் மேம்படவும், கிராம மக்கள் வளம் பெறவும், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் பொருளாதார வளர்ச்சி அடையவும், கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்-அமைச்சர் ஜெயலலிதா கூறினார்.

**தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் 189 காலிப்பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்; அமைச்சர் காமராஜ் அறிவிப்பு**



சென்னை,

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் உள்ள 189 காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் என்று சட்டசபையில் அமைச்சர் காமராஜ் அறிவித்தார்.

மொத்த ரேஷன் அட்டைகள்

தமிழக சட்டசபையில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கான மானியக் கோரிக்கை மீது எம்.எல்.ஏ.க்கள் விவாதித்தனர். அவர்களுக்கு பதிலளித்து அந்தத் துறையின் அமைச்சர் ரா.காமராஜ் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் உள்ள, ஒரு கோடியே 88 லட்சத்து 75 ஆயிரத்து 610 ரேஷன் அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ அரிசி விலையின்றி வழங்கப்படுகிறது. 34 ஆயிரத்து 298 ரேஷன்கடைகள் உள்ளன.

புதிய அட்டைகள்

கடந்த நான்கு ஆண்டுகளில் 12 லட்சத்து 64 ஆயிரத்து 825 புதிய ரேஷன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 4 லட்சத்து 12 ஆயிரத்து 978 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளன.

அரிசி கடத்தலில் ஈடுபட்ட 5 ஆயிரத்து 714 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 35 ஆயிரத்து 885 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 10 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 25 ஆயிரத்து 756 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 746 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.இவ்வாறு அவர் பதிலளித்தார்.

பராமரிப்புப் பணி

அதைத் தொடர்ந்து அமைச்சர் காமராஜ் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 219 சொந்தக் கிடங்குகள்

இயங்குகின்றன. முதற்கட்டமாக 10 கிடங்குகளிலும், 5 நவீன அரிசி ஆலைகளிலும் சிறப்பு மராமத்து பராமரிப்புப் பணிகள் செய்யப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சென்னை திருவான்மியூர் கிடங்கு, ஈரோடு மாவட்டம் சேனாபதிபாளையம் கிடங்கு, நீலகிரி மாவட்டம் உதகை கிடங்கு ஆகியவற்றின் வளாகச்சாலை மேம்படுத்தப்படும். தஞ்சாவூர் மாவட்டம் நீலகிரி தெற்குதோட்டம் கிடங்கில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

நெல் உலர்த்தும் களம்

தஞ்சாவூர் மண்டலம் பட்டுக்கோட்டை மற்றும் காஞ்சீபுரம் மண்டலம் திம்மாவரம் ஆகிய இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படும் தொழிலக நீரியல் கழிவுநீரை சுத்திகரிக்க, நவீன எந்திரங்களைக் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் அறுவடையாகும் நெல்லை உலர்த்துவதற்கு வசதியாக, சொந்தக் கட்டிடங்களில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கூடுதலாக 10 உலர்த்தும் களங்கள் அமைக்கப்படும். காவிரி டெல்டா மாவட்டங்களில் கூடுதலாக 100 நெல் தூற்றும் எந்திரங்கள் வழங்கப்படும்.

காலிப் பணியிடம்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் சேமிப்புக் கிடங்கு அலுவலகங்களில் காலியாக உள்ள 77 உதவியாளர் மற்றும் துணை சேமிப்புக் கிடங்கு மேலாளர், 34 அலுவலக உதவியாளர், 78 காவலர் என மொத்தம் 189 காலிப்பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்படும் தானியங்களை பூச்சிகளின்றி பாரமரிக்க முதற்கட்டமாக 54 கிடங்குகளில் 162 நவீன புற ஊதா ஒளிப்பொறிகள் வைக்கப்படும்.

நெடுஞ்சாலை உணவகங்களிலும், வணிக நிறுவனங்களிலும் விற்கப்படும் உணவுப் பொருட்கள் தரம் மற்றும் பொருட்கள், அதிகபட்ச விற்பனை விலைக்கு மிகாமல் விற்கப்படுவதை உறுதி செய்வது தொடர்பான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.

இவ்வாறு அவர் அறிவிப்புகளை வெளியிட்டார்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் குளம் ஏற்படுத்தப்படும் தேவேந்திர பட்னாவிஸ் பேச்சு**



மும்பை,

மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விதர்பா, மரத்வாடா பகுதிகளுக்கு முதல்- மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் கடந்த 3 நாட்களாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு விவசாயிகளை சந்தித்து பேசி வந்தார். இந்தநிலையில் நேற்று முன்தினம் முதல்- மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் உஸ்மனாபாத்தில் தாம்காவ், பரந்தா மற்றும் பூம் ஆகிய வறட்சி பாதித்த பகுதிகளில் விவசாயிகளை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குளம் வெட்டப்படும். இதன் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மேலும் வெட்டப்படும் குளங்களில் சேகரிக்கப்படும் மழைநீர் விவசாய பணிகளுக்கு பயன்படுத்த உதவியாக இருக்கும். மேலும் மரத்வாடாவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூடுதல் ரெயில் பெட்டிகள் மூலம் குடிநீர் கொண்டு செல்ல ரெயில்வே நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**பொள்ளாச்சி உழவர் சந்தையில் கடந்த மாதத்தில் மட்டும் ரூ.1 கோடியே 20 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை நிர்வாக அலுவலர்கள் தகவல்**



பொள்ளாச்சி உழவர் சந்தையில் கடந்த மாதத்தில் மட்டும் ரூ.1 கோடியே 20 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளதாக நிர்வாக அலுவலர்கள் தெரிவித்தனர்.

உழவர் சந்தை

பொள்ளாச்சி உழவர் சந்தைக்கு கத்திரிக்காய், தக்காளி, வெண்டைக்காய், பெரிய வெங்காயம், கேரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு, பீட்ரூட், பாகற்காய், அவரை, புடலைங்காய், சேனைக்கிழங்கு, முருங்கைக்காய் உள்பட பல்வேறு வகையான காய்கறிகள், பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

உழவர் சந்தைக்கு கானல்புதூர், சோமந்துறைசித்தூர், சேத்துமடை, வடக்கிபாளையம், கோமங்கலம்புதூர், ராமபட்டிணம், சுப்பேகவுண்டன்புதூர் உள்பட 28 கிராமங்களில் இருந்து சுமார் 80 விவசாயிகள் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.காய்கறிகள் விற்பனை செய்ய வசதியாக ஒவ்வொரு

விவசாயிக்கும் தனி, தனியாக இடம் ஒதுக்கப்பட்டு உள்ளது. ஒரு நாளைக்கு 17 முதல் 18 டன் வரை காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

விவசாயிகளுக்கு லாபம்

இதுகுறித்து பொள்ளாச்சி உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ரங்கராஜ், உதவி நிர்வாக அலுவலர்கள் மாடசாமி, சரவணன் ஆகியோர் கூறியதாவது:-

உழவர் சந்தைக்கு காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வரும் விவசாயிகளுக்கு 20 சதவீதம் லாபம் கிடைக்கிறது. இதே வெளிமார்க்கெட்டில் 10 சதவீத லாபம் தான் கிடைக்கும். சந்தைக்கு வரும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு கொடுக்கப்பட்டு உள்ளது.

இதன் மூலம் விவசாயிகள் காய்கறிகளை பஸ்சில் கொண்டு வர எந்தவித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. விவசாயிகளின் வசதிக்காக சோமந்துறை சித்தூர், கானல்புதூர், ஜி.சங்கம்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து உழவர் சந்தைக்கு பஸ் இயக்கப்படுகிறது.

ரூ.6 கோடிக்கு விற்பனை

காய்கறியின் தரத்தை பிரித்து விலை நிர்ணயம் செய்து, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. தினமும் காய்கறிகளை வாங்க தினமும் 2 ஆயிரம் பொதுமக்கள் வருகின்றனர். கடந்த மாதம் (ஆகஸ்டு) மட்டும் உழவர் சந்தைக்கு ரூ.5 லட்சத்து 66 ஆயிரத்து 555 கிலோ காய்கறி வந்துள்ளது.

இந்த காய்கறிகளின் மதிப்பு ரூ.1 கோடியே 20 லட்சம். இந்த காய்கறிகளின் விற்பனை செய்ய 2483 விவசாயிகளும், காய்கறிகள் வாங்க 94 ஆயிரத்து 424 நுகர்வோரும் வந்துள்ளனர். ஜூலை மாதம் ரூ.1 கோடியே 26 லட்சத்து 88 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. ஆனால் ஜூலை மாதத்தை விட, கடந்த ஆகஸ்டு மாதம் விற்பனை குறைந்து உள்ளது. இதற்கு காய்கறிகளின் விலை குறைவு காரணம்.

இதை தவிர பொள்ளாச்சி உழவர் சந்தை சிற்றுண்டி மூலம் உடலுக்கு ஆரோக்கியம் தரும் சூப் வகைகள் காலை 5.30 மணி முதல் விற்பனை செய்யப்படுகிறது. முடக்கத்தான் கீரை, மணத்தக்காளி, கொள்ளு, முருங்கை கீரை, நெல்லிக்காய், வாத ரசம் போன்ற சூப்கள் ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**மாவட்டம் முழுவதும் பரவலாக மழை அதிகபட்சமாக லக்கூரில் 47.30 மில்லி மீட்டர் பதிவு**



கடலூர்,

மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக

லக்கூரில் 47.30 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

இடி- மின்னலுடன் மழை

கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பகலில் கடும் வெயிலும், இரவு நேரங்களில் பலத்த மழையும் பெய்து வருகிறது. இந்நிலையில் மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு அநேக இடங்களில் கன மழை பெய்யும் என்றும், கடலோர மாவட்டங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

அதன்படி நேற்று அதிகாலை 2 மணிக்கு திடீரென குளிர்ந்த காற்று வீசத்தொடங்கியது. சற்று நேரத்தில் பலத்த காற்றுடன் சாரல் மழை பெய்தது. நேரம் ஆக, ஆக இடி, மின்னலுடன் கன மழை கொட்டி தீர்த்தது. இந்த மழை காலை 5 மணி வரை நீடித்தது. விடிய, விடிய கொட்டி தீர்த்த மழையால் முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

மாணவர்கள் அவதி

தாழ்வான இடங்களில் மழைநீர் குட்டை போல் தேங்கியது. அண்ணா விளையாட்டு மைதானத்தில் மழை நீர் குளம் போல் தேங்கி நின்றதை காண முடிந்தது. உழவர் சந்தை, அண்ணா மார்க்கெட், பான்பரி மார்க்கெட் ஆகியவற்றில் பொதுமக்கள் நடமாட முடியாத அளவுக்கு சேறும், சகதியுமாக இருந்தது.

கடலூர் லாரன்ஸ் சாலையில் உள்ள ரெயில்வே சுரங்கப்பாதையில் அளவுக்கு அதிகமாக தண்ணீர் தேங்கி நின்றது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர். குறிப்பாக காலை நேரத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு சென்ற மாணவ- மாணவிகள் அவதிப்பட்டனர்.

சுரங்கப்பாதையை கடந்து சென்று விடலாம் என்று வந்த ஒரு சில வாகன ஓட்டிகள் தண்ணீரில் சிக்கி தடுமாறி கீழே விழுந்து எழுந்து சென்றதையும் காண முடிந்தது.

பெரும்பாலான வாகன ஓட்டிகள் மாற்றுப்பாதையான ரெயில்வே மேம்பாலம் வழியாக சுற்றி சென்றனர். தொடர் மழையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் மோட்டாரை இயக்கி சுரங்கப்பாதையில் உள்ள தண்ணீரை உடனடியாக வெளியேற்ற முடியவில்லை. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

லக்கூரில் 47.30 மில்லி மீட்டர் மழை

இதேபோல் தொழுதூர், பண்ருட்டி, கீழ்செறுவாய், வானமாதேவி, காட்டுமயிலூர், வேப்பூர் உள்பட பல்வேறு இடங்களிலும் விடிய, விடிய பலத்த மழை பெய்தது. இதனால் முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக லக்கூரில் 47.30 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. பிற இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:- கடலூர்- 39.20, தொழுதூர்- 38, வானமாதேவி- 32.20, காட்டுமயிலூர்- 22, கீழ்செறுவாய் - 10, வேப்பூர்- 6, பண்ருட்டி - 5.10. மாவட்டம் முழுவதும் சராசரியாக 9.51 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

**கம்மாபுரம் பகுதியில் சாமந்தி பயிர்கள் அமோக விளைச்சல் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் அவதி**



கம்மாபுரம் பகுதியில் சாமந்தி பயிர் சாகுபடி அமோக விளைச்சல் பெற்றும் அவற்றை சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் அவதியடைந்து வருகின்றனர்.

சாமந்தி சாகுபடி

கடலூர் மாவட்டம் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கே.தொழூர், பெருவரப்பூர், கோட்டுமுளை, பெருந்துறை, ஓட்டிமேடு, ஆலம்பாடி, பவழங்குடி, கீரமங்கலம் போன்ற கிராமங்களில் தோட்டக்கால் நிலங்களில் டென்ட்ரான்தீமா கிராண்டிப்ளோரா என்ற அறிவியல் பெயரை கொண்ட சாமந்தி சாகுபடி அதிகளவில் நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் மணிமுத்தாறு மற்றும் வெள்ளாறு செல்வதால் வண்டல் மண், கரிசல் மண் அதிகம் காணப்படுகிறது. இந்த நிலப்பரப்பில் எண்ணெய் மற்றும் மலர் வகை, காய்கறி பயிர்கள் அதிகம் சாகுபடியாகிறது.

விவசாயிகள் கவலை

இப்பகுதியில் சமீப காலமாக தோட்டக்கால் நிலங்களில் மலர் வகை சாகுபடிகள் அதிகம் சாகுபடியாகி வருகிறது. இந்நிலையில் கே.தொழூரில் விவசாயிகள் தோட்டக்கால் பயிராக சாமந்தி மலர் பயிர் சாகுபடி செய்துள்ளனர். தற்போது மலர்கள் பூத்துக்குலுங்கி அழகாக காட்சியளிக்கிறது. இப்பகுதி வழியாக பயணம் செய்பவர்கள் இந்த மலர்களை கண்டு ரசித்து செல்வதை காணமுடிகிறது. மலர் வகை பயிர்கள் இப்பகுதியில் செழித்து வளர்வதால் மலர் பயிர்கள் பயிரிட விவசாயிகளுக்கு ஆர்வம் இருந்தும் அறுவடை செய்யும் மலர்களை சந்தைப்படுத்த முடியாத காரணத்தை விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். இந்த பயிரை தொடர்ந்து பயிர் செய்து வரும் விவசாயி ஒருவர் கூறும் போது இப்பகுதியில் பயிரிடும் மலர்களை உள்ளூர் பூ வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கிச்செல்கின்றனர். சில வசதியான விவசாயிகள் சென்னை உள்ளிட்ட பல்வேறு பூ மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி வருகின்றனர்.

சந்தை இல்லை

இதேபோல சேப்பளாநத்தம், கோட்டகம், உய்யகொண்டராவி, மணக்கொல்லை, பாலக்கொல்லை விவசாயிகளும் மலர் பயிரிட ஆர்வம் இருந்தும் சந்தை இல்லாத காரணத்தினால் குறைந்த அளவே மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் விருத்தாசலத்தை மையமாக வைத்து மலர் சந்தை அமைக்க வேண்டும். மேலும் இப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களும், வேளாண்மை துறை அதிகாரிகளும், தோட்டக்கால் துறை அதிகாரிகளும் இணைந்து தீவிர நடவடிக்கை எடுத்து மற்ற விவசாய பயிர்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை மலர் சாகுபடிக்கும் அளித்து விவசாயிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தினால் இன்று தோட்டக்கால் பயிராக சாகுபடியாகும் சாமந்தி போன்ற மலர்

வகை பயிர்களை பெரும் நிலப்பரப்பில் சாகுபடி செய்ய விருப்பம் இருப்பதாக தெரிவித்தார்.

**வேளாண் இடுபொருட்களை விவசாயிகள் மானிய விலையில் பெறலாம் இணை இயக்குனர் தகவல்**




தர்மபுரி மாவட்ட விவசாயிகள் வேளாண் இடுபொருட்களை மானிய விலையில் பெறலாம் என்று தர்மபுரி மாவட்ட வேளாண் இணை இயக் குனர் (பொறுப்பு) வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மானிய திட்டங்கள்

தர்மபுரி மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 853.1 மி.மீட்டர் ஆகும். இதில் ஆகஸ்டு மாதம் வரை பெய்ய வேண்டிய சராசரி மழையளவான 385.2 மி.மீட்டருக்கு கூடுதலாக இதுவரை 492 மி.மீட்டர் மழை பெய்து உள்ளது. இந்த மழையை பயன்படுத்தி நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்து மற்றும் பருத்தி பயிர் சாகுபடி பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். தென்மேற்கு பருவமழை முழுமையாக பெய்யாமல் காலதாமதமாக ஆகஸ்டு மாதத்தில் பெய்துள்ளது.

இதன்காரணமாக விவசாயிகள் அதிக கால அளவு கொண்ட பயிர்களை சாகுபடி செய்வதை தவிர்த்து குறுகிய கால பயிர்களான சாமை, ராகி, மக்காச்சோளம் உள்ளிட்டவற்றை பயிரிட ஆலோசனை வழங்கப்படுகிறது. இவ்வாறு சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விவசாய கருவிகள், மானிய விலையில் விதைகள், உற்பத்தி மற்றும் வினியோக மானியம் உள்ளிட்ட இனங்களை செயல்படுத்த ரூ.11 கோடியே 70 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு விவசாயிகளுக்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விதைகள் இருப்பு

**ஈரோடு நேதாஜி மார்க்கெட்டில் சின்ன வெங்காயத்தை வாங்க பொதுமக்கள் ஆர்வம்**



ஈரோடு,

கடந்த சில நாட்களாக பெரிய வெங்காயத்தின் விலை விண்ணை தொடும் அளவு உயர்ந்து உள்ளது. ஒரு கிலோ ரூ.80-க்கு விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் வெங்காயம் வாங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். எனவே வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய, மாநில அரசுக்கு பல்வேறு அரசியல் கட்சியினரும், மக்களும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இதைத்தொடர்ந்து வெங்காயத்தை பதுக்கி வைத்திருப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரிக்கை விடுத்து உள்ளது.

இந்தநிலையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பெரிய வெங்காயம் வாங்குவதை தவிர்த்துவிட்டு பொதுமக்கள் சின்ன வெங்காயத்தை அதிகமாக வாங்கி

செல்கின்றனர். இதேபோல் சமையலுக்கு சின்ன வெங்காயத்தை பயன்படுத்துகிறார்கள்.

இதனால் ஈரோடு நேதாஜி மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளது. மார்க்கெட்டிற்கு வரும் பொதுமக்கள் பெரிய வெங்காயத்தை காட்டிலும் சின்ன வெங்காயத்தை அதிகமாக வாங்கி செல்கின்றனர்.

**இந்தியாவில் தென்னை விவசாயிகள் மூலம் ஆண்டுக்கு ரூ.7 ஆயிரம் கோடி வருமானம் தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் தகவல்**



இந்தியாவில் தென்னை விவசாயிகள் மூலம் ஆண்டுக்கு ரூ.7 ஆயிரம் கோடி வருமானம் கிடைக்கிறது என்று தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

உலக தென்னை தின விழா

மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தென்னை வளர்ச்சி வாரியம் குமரி மாவட்ட வேளாண் விற்பனைத்துறை, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் குமரி மாவட்ட தென்னை உற்பத்தியாளர் சங்கத்துடன் இணைந்து உலக தென்னை தினவிழாவை கன்னியாகுமரி ஒய்.எம்.சி.ஏ அரங்கத்தில் நடத்தியது.

இதில் தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் பாலசுதாகரி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

வருமானம்

இந்தியாவில் உள்ள 1 கோடி தென்னை விவசாயிகள் மூலம் ஆண்டுக்கு ரூ.7 ஆயிரம் கோடி தேசிய வருமானமாகவும், ரூ.500 கோடி அன்னிய செலவாணியாகவும் கிடைக்கிறது. குமரி மாவட்டத்தில் 24 ஆயிரம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி நடந்து வருகிறது.

இதன் மூலம் 2 ஆயிரத்து 870 லட்சம் தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. குடும்பத்துக்கு ஊட்டம், உடல்நலம் தருவது தென்னை மட்டும் தான். எந்த ஒரு சுபகாரியத்தையும் தேங்காய் உடைத்து தொடங்குவது தான் இந்திய பாரம்பரியம் ஆகும். மனிதர்களின் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான உணவு, பானம், எண்ணெய், எரிபொருள் மற்றும் உறைவிடம் ஆகிய அனைத்தையும் தென்னை தருகிறது. அதனால் தான் தென்னை இயற்கையின் அற்புத மரம் என்று போற்றப்படுகிறது. தேங்காயில் 50 சதவீதம் சமையலுக்கும், 35 சதவீதம் கொப்பரைக்கும், 11 சதவீதம் எண்ணெய்க்கும், 2 சதவீதம் விதைகளுக்கும், 2 சதவீதம் அழகு சாதன பொருட்களுக்கும் பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் இதுவரையில் 444 தென்னை உற்பத்தியாளர் சங்கங்களும், 57 தென்னை உற்பத்தியாளர் இணையங்களும், 6 தென்னை உற்பத்தியாளர் நிறுவனமும் அமைக்கப்பட்டுள்ளன. குமரி மாவட்டத்தில் 67 தென்னை உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குமரி மாவட்டத்தில்¢ மேலும் 3 தென்னை உற்பத்தியாளர் இணையங்கள் அமைப்பதற்கான பணிகள்¢ வேகமாக நடந்து வருகிறது.

விவசாயிகள் விலை நிர்ணயம்

ஈத்தாமொழி நெட்டைரக தென்னை கோலோச்சும் குமரி மாவட்டத்தில் குட்டை ரக தென்னங்கன்றுகளை விவசாயிகள் அதிக அளவில் உற்பத்தி செய்து தர வேண்டும். தேங்காய்களுக்கு தென்னை விவசாயிகளே விலை நிர்ணயம் செய்யும் காலம் விரைவில் வரவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த விழாவில் கோவை வேளாண்மை பல்கலைகழக துணை வேந்தர் ராமசாமி, கேரள மாநிலம் அனந்தபுரி தென்னை உற்பத்தியாளர் நிறுவன தலைவர் கிருஷ்ணன்நாயர், குமரி மாவட்ட வேளாணமைத்துறை இணை இயக்குனர் இளங்கோவன், திருப்பதிசாரம் வேளாண்மை ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த ஜேன்சுஜாதா, பண்ணை மேலாளர் தீப்திகுமார் உள்பட ஏராளமான தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**குடைமிளகாய் விலை கடும் வீழ்ச்சி கிலோ ரூ.10-க்கு விற்பனை ஆவதால் விவசாயிகள் கவலை**



ஓசூர் பகுதியில் குடை மிளகாய் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு கிலோ ரூ.10-க்கு விற்பனையாவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

குடை மிளகாய்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் பகுதி நல்ல மண் வளத்தையும், சீரான தட்ப வெப்ப நிலையையும் கொண்டுள்ளதால், இங்கு காய்கறிகள், கீரை வகைகள், பூக்கள் போன்றவை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, காய்கறிகளில் தக்காளி, பீன்ஸ், கேரட், முள்ளங்கி, குடைமிளகாய் ஆகிய பயிர்கள் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் ஓசூர், பாகலூர், பேரிகை பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள குடைமிளகாய்களுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. குடைமிளகாய் பயிர், நடவு செய்யப்பட்ட 90 நாட்களில் அறுவடை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் சாகுபடி

செய்ய ரூ.2 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரை செலவாகிறது. தற்போது, ஓசூர் சுற்றுப்புற பகுதிகளில், குடைமிளகாய் நன்கு விளைந்து அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

உரிய இழப்பீடு

ஒரு கிலோ குடைமிளகாய் ரூ.10-க்கும், ஒரு மூட்டை ரூ.350-க்கும் விலை போகிறது. ஆனால், கடந்த மாதம் ஒரு கிலோ குடைமிளகாய் ரூ.60-க்கும், ஒரு மூட்டை ரூ.1000-க்கும் விற்பனை செய்யப்பட்டது. தற்போது இதன் விலை கடும் வீழ்ச்சி அடைந்திருப்பதால் குடைமிளகாய் பயிரிட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஏற்கனவே, தக்காளியின் விலை கடும் வீழ்ச்சியடைந்து. வீதிகளில் கொட்டப்பட்டு வருகிறது. இதனால் தக்காளி பயிரிடும் ஏராளமான விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்தனர். இந்த நிலையில் தற்போது குடைமிளகாய் விலையும் சரிவடைந்திருப்பதால், அதை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், செலவுத்தொகை கூட கிடைக்காமல் தவித்து வருகின்றனர். இதற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று அவர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கலெக்டர் பழனிசாமி தொடங்கி வைத்தார்**



வெங்கிடங்கால் ஊராட்சியில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமை கலெக்டர் பழனிசாமி தொடங்கி வைத்தபோது எடுத்தபடம்.

வெங்கிடங்கால் ஊராட்சியில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமை கலெக்டர் பழனிசாமி தொடங்கி வைத்தார்.

தடுப்பூசி முகாம்

நாகை மாவட்டம் வெங்கிடங்கால் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்றது. முகாமினை கலெக்டர் பழனிசாமி தொடங்கி வைத்தார். பின்னர் இதுகுறித்து அவர் கூறியதாவது:-

நாகை மாவட்டத்தில் 9-வது சுற்று தடுப்பூசி முகாம் 21 நாட்களுக்கு நடைபெற உள்ளது. நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் இலவசமாக கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. இந்த தடுப்பூசி பணிகள் மேற்கொள்வது குறித்து கடந்த 15-ந்தேதி நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கிராம விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட அளவிலான துறை ரீதியான அலுவலர்களின் கூட்டம், துறைசார்ந்த அலுவலரின்

கூட்டம், பால் கூட்டுறவு சங்கங்களின் அலுவலர்களுக்கு கூட்டம் நடத்தி தடுப்பூசி மேற்கொள்வது குறித்து தெரிவிக்கப்பட்டது. மாவட்ட அளவிலான ஊராட்சி மன்ற தலைவர்களின் கூட்டம் நடத்தி கால் மற்றும் வாய் தடுப்பூசி பணி மேற்கொள்ள தக்க ஏற்பாடுகள் செய்துதர அறிவுறுத்தப்பட்டது.

நாகை ஒன்றியம்

இன்று (வெள்ளிக்கிழமை) நாகை ஒன்றியத்தில் மஞ்சக்கொல்லை, கருவேலங்கடை, செட்டிசேரி, நாகை நகராட்சி 7, 8, 9, 10 ஆகிய வார்டுகள், திருமருகல் ஒன்றியத்தில் கோபுராஜபுரம், புத்தகரம், ஏர்வாடி, காரையூர், கீழ்வேளூர் ஒன்றியத்தில் வடகரை, வங்கராமாவடி, கோவில்கண்ணாப்பூர், ஆந்தக்குடி, தேவூர், கீழையூர் ஒன்றியத்தில் புதுப்பள்ளி, மீனம்பநல்லூர், தலைஞாயிறு ஒன்றியத்தில் வெள்ளப்பள்ளம், வடுகூர், தென்பாதி, ராயபுத்தூர், வேதாரண்யம் ஒன்றியத்தில், வண்டுவாஞ்சேரி, கரியாப்பட்டினம், வேம்பதேவன்காடு, ஆதனூர், தேத்தாக்குடி தெற்கு, மயிலாடுதுறை ஒன்றியத்தில் கடக்கம், பூதங்குடி, சோழம்பேட்டை, குத்தாலம் ஒன்றியத்தில் மங்கநல்லூர், பருத்திக்குடி, ஆலங்காடு, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் பாகசாலை, நரசிங்கநத்தம், செம்பனார்கோவில், முக்கரும்பூர், மேலப்பெரும்பள்ளம், சீர்காழி ஒன்றியத்தில் திருநகரி, கொள்ளிடம் ஒன்றியத்தில் வடரங்கம் ஆகிய இடங்களிலும் நடக்கிறது. கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் தங்களது கால்நடைகளை முகாம் நடைபெறும் இடங்களுக்கு அழைத்து வந்து கோமாரி தடுப்பூசி போட்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறினார். முகாமில் கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் நாகராஜன், உதவி இயக்குனர் (கால்நடை பராமரிப்புதுறை) செய்யத்அலி, கீழ்வேளூர் ஒன்றியக்குழு தலைவர் முருகானந்தம், கீழ்வேளூர் தாசில்தார். சுந்தரவடிவேல்,

ஊராட்சி மன்ற தலைவர் ஜெயேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோடியக்கரை சரணாலயத்திற்கு வருகை தந்த பறவைகள் மும்பை பறவை ஆராய்ச்சியாளர் தகவல்**



சீசன் தொடங்குவதற்கு முன்பே கோடியக்கரை சரணாலயத்திற்கு வருகை தந்த பறவைகளை படத்தில் காணலாம்.

சீசன் தொடங்குவதற்கு முன்பே கோடியக்கரை சரணாலயத்திற்கு பறவைகள் வருகை தந்துள்ளன என்று மும்பை பறவை ஆராய்ச்சியாளர் தெரிவித்தார்.

கோடியக்கரை சரணாலயம்

நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா கோடியக்கரையில் வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது. இந்த பறவைகள் சரணாலயத்திற்கு ஆண்டு தோறும் ரஷ்ய்யா, ஈரான், ஈராக், ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், சைபீரியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பறவைகள் வந்து செல்கின்றன. இந்த பறவைகள் சரணாலயத்திற்கு ஆண்டுதோறும் 257 வகையான பறவைகள் சீசன் காலமான அக்டோபர் முதல் மார்ச் வரை வந்து செல்கின்றன. இந்தாண்டு பறவைகள் வரத்து குறித்து மும்பை பறவை ஆராய்ச்சியாளர் பாலச்சந்திரன் கூறியதாவது:-

கோடியக்கரையில் மும்பை பறவை ஆராய்ச்சி கழகத்தின் மூலம் 1972-ம் ஆண்டு முதல் இப்பகுதியில் பறவைகள் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 3 லட்சம் பறவைகளுக்கு வளையம் போடும் பணி நடைபெற்றுள்ளது. இயற்கை மற்றும் பறவைகளின் வாழ்விடம் குறைதல், மழை குறைவு போன்ற பல்வேறு காரணங்களால் பறவைகளின் வரத்து ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. 1975 முதல் 1996 வரை 20 லட்சத்திற்கு மேல் வந்து சென்ற பறவைகள் கடந்த சில ஆண்டுகளாக சுமார் 1 லட்சம் பறவைகள் வந்து செல்கின்றன.

பறவைகள் வரத்து குறைவு

குளிர் பிரதேசத்தில் இருந்து வரும் பறவைகள் இங்கு மழை குறைவால் கடும் வெப்பத்தை தாங்க முடியாமல் பல்வேறு பகுதிக்கு சென்று விடுகிறது. காடுகளில் இயற்கையான மரங்கள் அழிந்து, கருவை மரங்கள் அதிகரிப்பால் வெப்பம் அதிகரித்துள்ளது. மேலும் காடுகளில் குரங்குகள் அதிகமானதால் அவைகள் பறவைகளின் கூட்டை களைத்து முட்டை, குஞ்சுகளை சேதப்படுத்துகிறது. இதனாலும் பறவைகள் வரத்து குறைய

தொடங்கியுள்ளது. பறவைகள் வரத்து உணவு சங்கிலி சுழற்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. பறவைகள் அதிகமாக வந்தால் சுற்றுச்சூழல் சுகாதாரமாக இருக்கும் 1976-ம் ஆண்டு கோடியக்கரையில் வளையமிடப்பட்ட மண்டைஉள்ளான் என்ற பறவை 20 ஆண்டுகள் கழித்து மீண்டும் இங்கு பிடிப்பட்டது. ஆனால் அதன்பிறகு பறவைகள் வரத்து குறைய தொடங்கியுள்ளது. ரஷ்யாவிலிருந்து கண்ணாடிமூக்கு உள்ளான், வடகிழக்கு ரஷ்யா, ஆர்டிக் துருவத்திலிருந்து பஞ்சு உள்ளான் பறவைகள் கோடியக்கரை சரணாலயத்திற்கு சீசன் தொடங்குவதற்கு முன்பே வர தொடங்கியுள்ளன. எனவே பறவைகள் வரத்தை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் அதிக நிதி ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**எந்திரம் மூலம் நெல் நடவு குறித்த விழிப்புணர்வு முகாம்**



பொன்னமராவதி அருகே கண்டியாநத்தம் கிராமத்தில் தேசிய வேளாண்வளர்ச்சி திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் எந்திரம் மூலம் நெல் நடவு குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபாலன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன் வரவேற்றார். மாரியப்பன் அம்பலம் முன்னிலை வகித்தார். எந்திரம் மூலம் நெல் நடவு முறைகள் குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பிரபாகரன் விளக்கம் அளித்து பேசினார். முகாமில் கண்டியாநத்தம் கிராமத்தை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் அருளானந்தம், மலர்விழி ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் குமாரசாமி நன்றி கூறினார்.

**அரவைக்காக 950 டன் நெல் சரக்கு ரெயிலில்அனுப்பப்பட்டது**



தஞ்சையில் இருந்து திருநெல்வேலிக்கு சரக்கு ரெயிலில் 950 டன் நெல் அரவைக்காக அனுப்பப்பட்டது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல்சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல், தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் தஞ்சையில் உள்ள நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு சொந்தமான சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுவதோடு, தமிழகத்தில் திருவள்ளூர், மதுரை, சென்னை, விழுப்புரம், புதுக்கோட்டை உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படும். இந்த நெல் மூட்டைகள் சரக்கு ரெயில்களிலும், லாரிகள் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும்.

950 டன் நெல்

தற்போது தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நடைபெற்று வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல்மூட்டைகள், சேமிப்புக்கிடங்குகளில் இருந்தும், கொள்முதல் நிலையங்களில் இருந்தும் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. 950 டன் நெல் மூட்டைகள் சரக்கு ரெயிலில் 21 பெட்டிகளில் ஏற்றப்பட்டு திருநெல்வேலிக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

**மண்வளம் மேம்பாடு தொடர்பான கருத்தரங்கம் கலெக்டர் மதிவாணன் தொடங்கி வைத்தார்**



திருவாரூரில் நடைபெற்ற கருத்தரங்கில் கலெக்டர் மதிவாணன் ஒரு விவசாயிக்கு மண்வளம் மேம்பாடு மற்றும் கால்நடை உற்பத்தி திறன் தொடர்பான கையேடு வழங்கியபோது எடுத்தபடம்.

திருவாரூரில் மண்வளம் மேம்பாடு தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது. இதை மாவட்ட கலெக்டர் மதிவாணன் தொடங்கி வைத்தார்.

கருத்தரங்கம்

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு அரசு மாநில திட்டக்குழு நில பயன்பாடு-ஆராய்ச்சி வாரியம் மற்றும் உழவர் பயிற்சி மையம் சார்பில் திருவாரூரில் மண்வளம் மேம்பாடு, பசுந்தீவனம் உற்பத்தி, கால்நடை உற்பத்தி திறனை அதிகரித்தல் தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் மதிவாணன் கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியாவது:-

கால்நடைகளின் இன விருத்தி மற்றும் பால் உற்பத்தி திறன் அவை உட்கொள்ளும் தீவனங்களை பொருத்தே அமைகிறது. அடர் தீவனம், பசுந்தீவனம், உலர் தீவனம் மற்றும் இதர தீவனங்களில் உள்ள சத்துகளின் அளவை பொருத்தே உற்பத்தி திறன் இருக்கும். பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனத்தில் உள்ள சத்துகளானது அவை வளரும் மண் மற்றும் நீரில் உள்ள சத்துகளை பொருத்து அமைகிறது. மண், பசுந்தீவனம் மற்றும் கால்நடைகளுக்கு இடையே உள்ள சத்து சுழற்சி மூலம் உற்பத்தி திறனை அதிகப்படுத்தலாம். இதை பற்றி விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த கருத்தரங்கின் நோக்கம்.

அதிக லாபம் ஈட்டலாம்

மண் வளமும், மனித வளமும் ஒரு நாட்டுக்கு முக்கியமானவை. இந்திய

பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மையும் அதனுடன் இணைந்த கால்நடை வளர்ப்பும் முக்கிய பங்கு வகிக்கிறது. மண் வளம் மேம்பாடு அடைய அதை பற்றிய ஆய்வு முக்கியம். திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மண் ஆய்வு கூடங்கள், வட்டார வேளாண்மை ஆலோசனை மையங்கள் உள்ளிட்டவை எப்போது, எந்த பயிர் உகந்தது என்பது பற்றி விவசாயிகளுக்கு அறிவுறுத்த வேண்டும். மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு பசுந்தீவன பயிர்களை பயிரிட்டால், கால்நடை வளர்ப்பில் அதிக லாபம் ஈட்டலாம். இவ்வாறு கலெக்டர் மதிவாணன் கூறினார்.

கையேடு

முன்னதாக கலெக்டர் மதிவாணன் விவசாயிகளுக்கு மண்வளம் மேம்பாடு மற்றும் கால்நடை உற்பத்தி திறன் தொடர்பான கையேடுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக இயக்குனர் பாபு, கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி பிரிவு துணை இயக்குனர் முகமதுஉதுமான், உதவி கலெக்டர் முத்துமீனாட்சி, மாவட்ட வளர்ச்சி மேலாளர் ரவிசங்கர், நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன், உழவர் பயிற்சி மைய தலைவர் கதிர்செல்வன், செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வரத்து அதிகரித்ததால் திருச்சி மார்க்கெட்டில் மீன்களின் விலை வீழ்ச்சி**



வரத்து அதிகரித்ததால் திருச்சி மார்க்கெட்டில் மீன்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

புத்தூர் மீன்மார்க்கெட்

திருச்சி புத்தூர் மீன்மார்க்கெட்டுக்கு தமிழகத்தின் கடலோர பகுதிகளான நாகப்பட்டினம், வேதாரண்யம், ஜெகதாப்பட்டினம், தூத்துக்குடி, கோட்டைப்பட்டினம் உள்பட பல்வேறு இடங்களில் இருந்தும், கேரளா, ஆந்திரா போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும் மீன்கள் விற்பனைக்கு கண்டெய்னர் லாரிகளில் கொண்டு வரப்படுகிறது.

இங்கிருந்து திருச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் மீன்களை வாங்கி சென்று விற்பனை செய்து வருகிறார்கள்.

பொதுமக்களும் இங்கு வந்து சில்லறை விலையில் மீன்களை வாங்கி

செல்கிறார்கள்.

விலை குறைந்தது…

திருச்சி புத்தூர் மார்க்கெட்டில் மீன்களின் வரத்துக்கு தகுந்தாற்போல் விலையில் ஏற்ற, இறக்கம் இருக்கும். கடந்த சில நாட்களாக உச்சத்தில் விற்கப்பட்டு வந்த மீன்களின் விலை தற்போது வரத்து அதிகரித்ததால் கணிசமாக குறைந்து உள்ளது. கிலோ ரூ.700 முதல் 750-க்கு விற்கப்பட்ட பெரிய வஞ்சரம், தற்போது கிலோ ரூ.600-க்கு விற்கப்படுகிறது. சின்ன வஞ்சரம் 250 முதல் 300-க்கு விற்பனையாகிறது. ஊளி கிலோ ரூ.180 முதல் 220-க்கும், கிலோ ரூ.180 வரை விற்பனையான சங்கரா கிலோ ரூ.140-க்கும், மொரல் கிலோ ரூ.200-க்கும் விற்கப்படுகிறது.

வாவல் கிலோ ரூ.300 முதல் 350-க்கும், கிழங்கான் பெரியது ரூ.60-க்கும், கிழங்கான் சிறியது ரூ.40-க்கும் விற்கப்படுகிறது. ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டிணத்தில் இருந்து கொண்டு வரப்படும் நண்டு கிலோ ரூ.150-க்கும், தூத்துக்குடி நண்டு கிலோ ரூ.300-க்கும் விற்பனையாகிறது. இறால் ரூ.220, 250, 300 ஆகிய விலைகளில் விற்பனையாகிறது.

வரத்து அதிகம்

இது குறித்து மீன் வியாபாரி ஒருவர் கூறுகையில், “மார்க்கெட்டில் ஒரு சில சமயங்களில் பெரிய வஞ்சரம் கிலோ ரூ.800 வரை விற்பனை செய்து வந்தோம். இப்போது மொத்த மார்க்கெட்டில் கிலோ ரூ.400 முதல் 450-க்கு விற்கப்படுகிறது. சில்லறையில் ரூ.600 வரை விற்கிறார்கள். தற்போது வரத்து அதிகரித்து உள்ளது. அதனால் மீன்களின் விலை கணிசமாக வீழ்ச்சி அடைந்து உள்ளது. அடுத்தடுத்த மாதங்களிலும் விலை குறைந்து இருக்கவே வாய்ப்பு உள்ளது’’ என்றார்.

**தரமான விதையை தேர்வு செய்வது எப்படி? விவசாயிகளுக்கு அதிகாரி விளக்கம்**




தரமான விதையை தேர்வு செய்வது எப்படி? என்பது குறித்து கோவை விதை சான்று மற்றும் அங்கக சான்றளிப்பு துறை துணை இயக்குனர் பழனிசாமி விவசாயிகளுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

<u>பயிற்சி வகுப்பு</u>

பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) சார்பில் தரமான விதை உற்பத்தி மற்றும் விதை சான்றளிப்பு முறை குறித்த பயிற்சி வகுப்பு ஒன்றிய கூட்டரங்கில் நடைபெற்றது. இதற்கு ஒன்றிய குழு தலைவர் உமாமகேஸ்வரி தலைமை தாங்கினார். அட்மா திட்ட தலைவர் ரவிசுந்தரம் முன்னிலை வகித்தார். முன்னதாக வேளாண்மைத்துறை அதிகாரி சுமியா பானு வரவேற்று பேசினார்.

இதில் கோவை விதை சான்று மற்றும் அங்கக சான்றளிப்பு துறை துணை இயக்குனர் பழனிசாமி பயிற்சி அளித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

தரமான விதை என்பது பாரம்பரிய குணங்களில் இருந்து சிறிதும் குறையாமல் இருக்க வேண்டும். அதிகப்படியான முளைப்பு திறன், அளவான ஈரப்பதம், இனத்தூய்மை, புறத்தூய்மை, பூச்சி நோய் தாக்குதல் இல்லாமை ஆகிய குணாதிசயங்களை கொண்டதாக இருக்க வேண்டும்.

<u>தரமான விதை உற்பத்தி</u>

விதை தரத்திற்கு தமிழ்நாடு அரசு விதை சான்றுத்துறை உத்தரவாத சான்று வழங்குகிறது. விதை என்ற அடிப்படை இடுபொருளை தேர்ந்தெடுக்கும் போது சிறிது கவன குறைவு ஏற்பட்டாலும் மொத்த விளைச்சலும் பாதிக்கப்படும். விதை பண்ணைகளை விதை சான்றுத்துறை அலுவலர்கள் பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்து உற்பத்தி செய்யப்படும் விதை குவியலுக்கு நீலநிற அட்டையில் சான்று வழங்கப்படுகிறது.

இதில் பயிர் ரகம், உற்பத்தி தேதி, எடை அளவு, முளைப்புத்திறன், காலாவதி தேதி போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கும். இதை விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். விதை விதைத்தல், பயிர் வளர்ப்பு, பயிர் பாதுகாப்பு, வேளாண்மைத்துறை பரிந்துரைப்படி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>விவசாயிகள்</u>

இதில் விதை சான்றிளிப்பு வேளாண்மை உதவி இயக்குனர் சைலஸ், விதை பகுப்பாய்வு வேளாண்மை உதவி இயக்குனர் வெங்கடாசலம், விதைசான்று அலுவலர் மகேஸ்வரன், உதவி வேளாண்மை அலுவலர் கந்தசாமி, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாகநந்தினி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாரதிராஜா, லோகநாயகி, கோவை

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவ–மாணவிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு**



கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகின்றது. இதனை கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தடுப்பூசி முகாம்

கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது. நேற்று விருதுநகர் அருகே பட்டம்புதூர், இனாம்ரெட்டியபட்டி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை கலெக்டர் ராஜாராமன், கால்நடை வளர்ப்போர் இல்லங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு திடீர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது அவர் தெரிவித்ததாவது:-

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமம் மற்றும் குக்கிராமங்களில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி கடந்த 2011-ம் ஆண்டு ஜூலை முதல் தொடங்கப்பட்டு, 8 சுற்று தடுப்பூசி பணி முடிவடைந்துள்ளது. தற்போது 9-வது சுற்று தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டு செப்டம்பர் 21-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

காப்பீடு

விருதுநகர் மாவட்டத்தில் 2.24 லட்சம் பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. மாவட்டம் முழுவதும் நடைபெறும் இம்முகாம்களில் 44 தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டு தினந்தோறும் 10 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விவசாய பெருமக்கள் தங்களது பசுக்கள், எருமைகள் மற்றும் 4 மாதங்களுக்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்க மருந்து தவறாது போட்டுக்கொண்டு தங்களது கால்நடைகளை

பாதுகாக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

மேலும் விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளுக்கு கால்நடை காப்பீடுத்திட்டத்தின் மூலம் காப்பீடு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொண்டார்.

தினகரன்

**மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு நீர்திறப்பு குறைப்பு**




மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நீர்திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 5,851 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 4,020 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டு வந்தது. நேற்று முன்தினம் மாலையில் இருந்து 15 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது.

இதுதவிர கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 800 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர்வரத்தை விட, திறப்பு அதிகளவில் உள்ளதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 90.05 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 89.13 அடியாக சரிந்தது. அணையில் நீர் இருப்பு 51.66 டிஎம்சி.

**அமைச்சர் உறுதி: தட்டுப்பாடின்றி தரமான காய்கறிகள் கிடைக்கும்**




சட்டப் பேரவையில் நேற்று கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்துக்கு பிறகு கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ பதிலுரை: கூட்டுறவு வங்கிகளின் வைப்புத்தொகை ரூபாய் 46 ஆயிரத்து 435 கோடியாக உயர்ந்துள்ளது. பயிர்க்கடன்களுக்கு வழங்கப்பட்டு வந்த வட்டி மானியத்தை, மத்திய அரசு 30.6.2015 தேதியோடு திடீரென்று நிறுத்திக் கொள்ளப் போவதாக அறிவித்தது. இதனால், இத்திட்டம் தொடரப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

, விவசாயிகளுக்கு ரூபாய் 234.85 கோடி காய்கறிப் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இனி ஆண்டு முழுவதும் தமிழக மக்களுக்கு தட்டுப்பாடின்றி தரமான காய்கறிகள் கிடைக்கும். விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் மூலமாகவும், அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் 35 கிலோ விலையில்லா அரிசி மலைப்பகுதிகள் மற்றும் எளிதில் அணுக இயலாத ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, 33 நகரும் நியாயவிலைக் கடைகள் வாயிலாக, 285 குக்கிராமங்களுக்கும் மற்றும் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கும் நேரடியாக சென்று விநியோகம்

செய்யப்படுகிறது.

மலைவாழ் மக்களால் உற்பத்தி செய்யப்படும் வனப்பொருள்களான சாமை, வரகு, புளி மற்றும் தேன் போன்ற வனப்பொருள்களை கொள்முதல் செய்து அவற்றிற்கு ரூ.57.33 லட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் செல்லூர் ராஜூ தனது பதிலுரையில் கூறினார்.

**விவசாய குழுக்களுக்கு ஒரு நாள் ஆய்வக பயிற்சி**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பூச்சிநோய் மேலாண்மை மாதிரி கிராமம் திட்டத்தின்கீழ் விவசாய குழுக்களுக்கு ஒரு நாள் ஆய்வக பயிற்சி முகாம் நடந்தது. திருச்சி மாவட்டம் துறையூர் வட்டாரத்தில் உள்ள மாவட்ட திட்டக்குழு மூலம் செயல்படுத்தப்படும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் வேளாண்மைத்துறையின் ஒருங்கிணைந்த பூச்சிநோய் மேலாண்மை மாதிரி கிராமம் திட்டத்தின்கீழ் உயிரியல் காரணிகள் உற்பத்தி மையம் அமைக்கவுள்ள விவசாய குழுக்களுக்கு ஒரு நாள் ஆய்வக பயிற்சி, திருச்சியில் உள்ள உயி◌ா◌ியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் நடந்தது. பயிற்சியை திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சந்திரசேகரன் துவக்கி வைத்தார். வேளாண்மை துணை இயக்குநர், மத்திய திட்டம் மற்றும் மாநில திட்டம் சரவணன் முன்னிலை வகித்தார். தொழில்நுட்ப கருத்துகளை வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) பால்ராஜ் வழங்கினார். ஆய்வகத்தில் வணிக ரீதியில் உயிரியல் காரணிகள் உற்பத்தி செய்வது பற்றி உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் எஸ்தர் பிரேமகுமாரி விளக்கம் அளித்தார்.

பயிற்சியில் ரெங்கநாதபுரம் திருமலை விவசாயிகள் குழு, சேனப்பநல்லூர்

பசுமை விவசாயிகள் குழு, கீராம்பூர் இயற்கை விவசாயிகள் குழு, செங்காட்டுப்பட்டி அன்னை தெரசா விவசாயிகள் குழு, ஆதனூர் காவோி விவசாயிகள் குழு ஆகிய ஐந்து குழுக்களை சேர்ந்த 100 விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை துறையூர் வட்டார வேளாண்மைத்துறை அலுவலர்கள் செய்திருந்தனர். துறையூர் வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தி நன்றி கூறினார்.

**ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்திற்கு நிதி**

கோவில்பட்டி, : ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என மத்திய அரசிற்கு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.மத்திய அரசு இந்திய அளவில் உள்ள நிலங்களில் மரம் வளர்த்தல், நீராதாரத்தை உருவாக்குதல், மண்வளத்தை மேம்படுத்துதல், வனவளத்தை பாதுகாத்தல், மக்களின் வாழ்வாதாரத்தை உருவாக்குதல், தரிசு நிலங்கள் மற்றும் பாலைவனங்களை மேம்பாடு செய்தல் போன்ற பணிகளை ஒருங்கிணைந்த நீர்வடிபகுதி திட்டம் மூலம் அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டத்தில் 119 ஊராட்சிகளிலும், தமிழக அளவில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊராட்சிகளில் 30 ஆயிரம் குளம், குட்டை, ஊரணிகள் வரத்துகால் ஆகியவற்றில் தூர்வாருதல் மற்றும் மேம்பாடு செய்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக பொறுப்பேற்ற மத்திய அரசு கடந்த ஒன்றரை ஆண்டாக இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. மாறாக இத்திட்டத்தை மத்திய அரசு மூலம் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி நடந்து வருகிறது.

நீர்வடிப்பகுதி திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து மாநில

அரசுகளின் வேளாண்மை துறை மூலமே நடைபெறுவதால் தங்களை முன்னிலைப்படுத்தி கொள்கிறது என கருதி இத்திட்டத்திற்கு வேண்டிய நிதியை 90 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக குறைக்க ஓராண்டிற்கு முன்பு மத்திய அரசு முடிவு செய்தது. தற்போது அந்த 50 சதவீதம் நிதியையும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்யவில்லை. எனவே இதனை கருத்தில் கொண்டு மத்திய அரசு தொடர்ந்து ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்த வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து மதிமுக மாநில விவசாய அணி துணை செயலாளர் வரதராஜன் கூறியதாவது;தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. இதற்கு மாறாக இந்த திட்டத்தை தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் இணைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் மத்திய அரசு இந்த முடிவை கைவிட்டு ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து திட்டம் தொடர்ந்து செயல்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**கரூர் மாவட்டத்தில் 8 ஊராட்சிகளில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம்**

கரூர், : கரூர் மாவட்டம் நஞ்சைகாளகுறிச்சியில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் சிறப்பு கால்நடை பாதுகாப்புத்திட்ட முகாம் துவக்க விழா நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்து முகாமை துவக்கி வைத்து பேசுகையில், கரூர் மாவட்டத்தில் 8ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா 14முகாம் வீதம் 112 முகாம் நடத்த திட்டமிட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதில் கருவூட்டல் தடுப்பூசி,

ஆண்மை நீக்கம் சிகிச்சைக்கான செயற்கை முறை, மலட்டுத்தன்மை நீக்கம், சினைபரிசோதனை போன்ற சிகிச்சைகள் வழங்கப்பட்டுவருவதுடன் கால்நடை வளர்ப்பு குறித்த திட்ட விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

சிறப்பு முகாமில் ஆடு, மாடுகளுக்கு மட்டுமின்றி கோழிகள், வளர்ப்பு நாய்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் கால்நடை வளர்ப்புக்கு தேவையான தீவனப்புல் வளர்த்தல், தீவனங்களை சேமித்து வைத்து கால்நடைகளுக்கு வழங்கும் விதமாக புல்ஊறுகாய் தயாரிக்கும் திட்டங்களை துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான பயிற்சிகளை பெற்ற தீவனங்களை பாதுகாக்கலாம் என்றார். பின்னர் பச்சிளங்கன்றுகளின் உரிமையாளர்களுக்கு பரிசு வழங்கி, தாது உப்பு வகை மருந்துகளை வழங்கினார். நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் ராமநாதன், உதவி இயக்குனர்கள் குழந்தைசாமி, முருகேசன், ராஜேந்திரன், கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் அகிலா, உதவிமருத்துவர்கள் மோகன்ராஜ், சிவானந்தம், கோபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சம்பா பருவ நெல் ரகங்கள் மானிய விலையில் கிடைக்கும்**

புவனகிரி, :பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரமேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களான சிதம்பரம், பின்னத்தூர், பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் சம்பா பருவத்திற்கேற்ற புதிய நெல் ரகங்கள் மானிய விலையில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதில் என்எல்ஆர் 34449, ஏடிடி(ஆர்)49, கோ(ஆர்) 50, சுவர்ணா சப் 1 ஆகியவை போதிய அளவில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் இவை கிலோ ஒன்றுக்கு ரூ 10 மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், பிபிடி 5204, ஏடிடி 39, பொன்னி, கோ 43 போன்ற நெல் ரகங்கள் விதை கிராம திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ 10 மானியத்தில் விநியோகிக்கப்படுகிறது. அதனால் தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை துறையால் வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேட்டுடன் சம்பந்தப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி மானிய விலையில் விதைகளை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

**செய்நேர்த்தி மூலம் பருத்தி, மிளகாய்க்கு கூடுதல் விலை பெறும் வழிமுறைகள் வேளாண்மைத்துறை ஆலோசனை**

பரமக்குடி, : பருத்தி, மிளகாய்க்கு கூடுதல் விலை கிடைக்க மேற்கொள்ள வேண்டிய செய்நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்துறை விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. பருத்தி, மிளகாய் போன்றவற்றை அறுவடை செய்து அப்படியே விற்பனைக்கு கொண்டு செல்வதால் விலை குறைவாக கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. சில செய்நேர்த்தி தொழில்நுட்பங்களை மேற்கொள்வதின் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும். பருத்தியை பொறுத்தளவில் சுத்தத்தன்மை, நிறம், மென்மை, குறைவான ஈரம் ஆகிய நான்கும் விலையை தீர்மானிக்கும். எனவே நன்கு மலர்ந்த பருத்தியை மட்டும் செடியில் இருந்து பறிக்க வேண்டும். மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு ஒருமுறை பருத்தியை பறிக்கலாம். காலை நேரங்களில் பறிப்பது சிறந்தது. அப்போதுதான் காய்ந்த இலை, சருகுகள் பருத்தியில் ஒட்டாது. சேகரித்த பருத்தியை நிழல், மணல் பரப்பிய களங்களில் காயப்போட வேண்டும். நேரடி வெயிலில் உலர வைத்தால் பஞ்சின்நிறம் குறைந்துவிடுவதுடன் மென்மைத்தன்மையும் பாதிக்கும்.

பின்பு நன்குஉலர்த்தி, சருகுகள், பூச்சிநோய் தாக்கியது, கொட்டைகள் உள்ளிட்டவற்றை அகற்ற வேண்டும். தொடர்ந்து காற்றோட்டமான அறைகளில் மணல் பரப்பிய தரையில் சேமிக்க வேண்டும். பருத்தியை ரகம்வாரியாக தனித்தனியாகச் சேமிப்பது நல்லது.
மிளகாய்: மிளகாயில் பூஞ்சாணக்கொல்லிகள் தெளித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மிளகாய் செடியில் பழங்கள் முழுவதும் சிவப்புநிறமாக மாறியவுடன் பறிக்கலாம். பழங்களைப் பறித்த அன்றே காயப்போட வேண்டும். மணல் பரப்பிய களங்கள் இதற்கு ஏற்றது. மிதமான வெப்பநிலையில் காலையிலும், மாலையிலும் நான்கு நாட்கள் காயப்போட வேண்டும். இரவில் மிளகா பனியால் பாதிக்கப்படாமல் இருக்க பழங்கள் மீது இலேசான படுதாவைப்போட்டு மூடி வைக்கலாம். மிளகாய்வற்றல் சிவப்புநிறமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். தவறான சேமிப்புமுறையில் வற்றல் கருப்பு நிறமாக மாறினால் நல்லவிலைக்கு விற்கமுடியாது.
மிளகாய் வற்றலை சந்தைக்கு கொண்டு செல்லும்போது சாக்கு அமுக்கக்கூடாது. இதனால் வத்தல் உடைந்து எதிர்பார்த்த விலை கிடைக்காமல் போகலாம் என்று வேளாண்மைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

**விசை உழுவை இயந்திரம் வாங்க விவசாயிகளுக்கு ரூ.75 ஆயிரம் மானியம் கலெக்டர் தகவல்**

நெல்லை, : தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் விசை உழுவை இயந்திரம் வாங்க விவசாயிகளுக்கு ரூ.75 ஆயிரம் அதிகபட்ச மானியம் வழங்கப்படுவதாக கலெக்டர் கருணாகரன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது: நெல்லை மாவட்டத்திற்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் விசை உழுவை இயந்திரம்

வாங்க ரூ.40 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரை மானியம் வழங்கப்பட உள்ளது. அதன்படி 8 குதிரை சக்திக்கு குறைவான விசை உழுவை இயந்திரத்திற்கு சிறுகுறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியமாக ரூ.50 ஆயிரமும், இதர விவசாயிகளுக்கு ரூ.40 ஆயிரமும் பணி முடிவு மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

8 குதிரை சக்திக்கு அதிகமான மின் உழுவை இயந்திரம் வாங்க சிறுகுறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு அதிகபட்ச மானிய தொகையாக ரூ.75 ஆயிரம் (ஒரு இயந்திரத்திற்கு) வழங்கப்பட உள்ளது. இதர விவசாயிகளுக்கு ரூ.60 ஆயிரமும் அதிகபட்ச மானியமாக வழங்கப்பட உள்ளது.விசை உழுவை இயந்திரம் வாங்க விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை அலுவலரை தொடர்பு கொண்டு முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

வேளாண் பொறியியல் துறை, தலைமை பொறியாளர் அங்கீகரித்துள்ள நிறுவனங்களில் தங்கள் விருப்பப்படி ஏதேனும் ஒரு நிறுவனத்தை தேர்வு செய்ய வேண்டும். அந்த நிறுவனத்தில் விசை உழுவை இயந்திரத்தை முழு விலையில் வாங்கி அதற்குரிய விலைப்பட்டியல்கள் மற்றும் புகைப்பட ஆதாரங்களுடன் விண்ணப்பித்தால் தகுதியான விவசாயிகளுக்கு மானியம் அவரது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினபூமி

**உலகில் மரங்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்தது: ஆய்வில் தகவல்**



நியூயார்க் - உலகில் தற்போது 3.04 ட்ரில்லியன் மரங்களே உள்ளன. மரத்தின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளது என்று வன மரங்கள் அடர்த்தி வரைபடம் தெரிவிக்கிறது. மேலும் நபர்கள், மரங்கள் விகிதாசரமும், 422 மனிதர்களுக்கு ஒரு மரம் என்ற அளவில் உள்ளதாக

இந்தக் கணிப்புகள் கூறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் வெட்டப்படும் மரத்தின் எண்ணிக்கை 1,500 கோடிக்கும் அதிகமாகியுள்ளது. மேலும் ஆண்டொன்றுக்கு 192,000 சதுர கீமீ பரப்பளவுக்கு காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகள் அதிவேகமாக அழிக்கப்பட்டு வருவதால் மானுட நாகரீகம் தொடங்கும்போது இருந்த மரங்கள் எண்ணிககை தற்போது பாதியாக குறைந்துள்ளது. இத்தகவல்கள் நேச்சர் என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ளது.

தற்போது இருக்கும் 3.04 ட்ரில்லியன் மரங்களில் வெப்ப மண்டல மற்றும் துணைவெப்ப மண்டலக் காடுகளில் 1.39 ட்ரில்லியன் மரங்கள் உள்ளன. வடமுனைப் பகுதிகளில் 0.74 ட்ரில்லியன் மரங்கள் உள்ளன. மிதவெப்பப் பகுதிகளில் 0.61 ட்ரில்லியன் மரங்கள் உள்ளன. இன்றைய தேதி வரை உலக வனப்பகுதிகளை அளவிட விஞ்ஞானிகள் செயற்கைக்கோள் படங்களையே நம்பியிருக்கின்றனர். இதனால் மரங்கள் எண்ணிக்கையை சரியாக அளவிட முடியவில்லை. எனவே மரங்களின் எண்ணிக்கையைக் கண்டறியும் அசுர முயற்சியாக அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்தின் டி.டபிள்யூ. குரோதர் என்பவர் சுமார் 4 லட்சத்து 30,000 பூமி சார் அளவு முறைகளை பயன்படுத்தி அண்டார்டிகா நீங்கலாக அனைத்து கண்டங்களின் மரங்களைக் கணக்கிடும் உலக வரைபடத்தை உருவாக்கினார்.

ஓரளவுக்கு மிதவெப்பமும் நீராதார இருப்பும் மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்றாலும், பல இடங்களில் மிதவெப்ப, நீராதார இருப்பின் அளவுகளுக்கு இடையே கடும் இடைவெளி மிகுந்துள்ளதால் மரங்களின் வளர்ச்சி விகிதமும் கடுமையாகக் குறைந்துள்ளன. பல இடங்களில் அடர்ந்த காடுகள் பல விவசாய நிலங்களாக மாற்றப்பட்டதும் மரங்கள் காணாமல் போனதற்கு காரணமாகியுள்ளன. இந்த அரிய ஆய்வின் மூலம் புவி வெப்பமடைதலில் மானுடச் செயல்பாடுகள் குறித்த புதிய புரிதல்களும், உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டிய புதிய உற்பத்திக் கொள்கைகள்

பற்றியும் சிந்திக்க வேண்டிய காலக்கட்டம் உருவாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

**புவி வெப்பமடைதலை தடுக்க அமெரிக்கா ஒத்துழைக்கும்: ஒபாமா உறுதி**



அலாஸ்கா - புவி வெப்பமயமாதலை தடுக்க அமெரிக்க தொழிற்சாலைகள் வெளியேற்றும் கார்பன் அளவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமா பேசினார். அமெரிக்க அதிபர் ஒபாமா ஆர்க்டிக் வளைவில் இருக்கும் அலாஸ்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். வெப்பமயமாதலால் ஏற்கெனவே அழிந்துகொண்டிருக்கும் அலாஸ்காவின் பகுதிகளை அவர் முதல்முறையாக பார்வையிட்டார்.

அப்போது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் பேசிய அமெரிக்க அதிபர் ஒபாமா, காலநிலை மாற்றம் குறித்து உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் பணியை ஈடுபட்டுவருகிறோம். ஆனால் நீங்கள் ஏற்கெனவே அத்தகையச் சூழலில் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்.

உலக மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் எதிர்பார்த்து தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலக அளவில் ஆர்க்டிக் வளைவின் வெப்பநிலை

இரட்டிப்பாக அதிகரித்து வருகிறது. இதனை அனைத்து மக்களும் உணரவேண்டியது அவசியம் என்றார். ஆர்க்டிக் வட்டத்தில் அமைந்திருக்கும் அலாஸ்கா பகுதியில் சுமார் ஒரு லட்சம் பேர் மிகவும் ஆபத்தானச் சூழலில் வாழ்ந்து வருவதாக ஏற்கெனவே அதன் அரசு அறிக்கை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**விவசாயிகளுக்கு 4 ஆண்டுகளில் ரூ.18 ஆயிரம் கோடி பயிர்க்கடன்: அமைச்சர் செல்லூர் கே.ராஜு தகவல்**

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரத்து 803 கோடி அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத் துக்கு பதிலளித்து அமைச்சர் செல்லூர் கே.ராஜு நேற்று பேசியதாவது:

திமுக ஆட்சியில் கூட்டுறவு வங்கி களில் வைப்புத் தொகை ரூ.26 ஆயிரத்து 247 கோடி மட்டுமே. ஆனால், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.46 ஆயிரத்து 435 கோடி வைப்புத் தொகை கிடைத்துள்ளது. திமுக ஆட்சியில் ரூ.9,163 கோடி அளவுக்கு வழங்கப்பட்ட பயிர்க்கடன், இந்த ஆட்சியில் ரூ.18 ஆயிரத்து 803 கோடி வரை கடன் வழங்கப்பட்டுள்ளது.

அம்மா மருந்தகங்கள், கூட்டுறவு மருந்தகங்கள் வாயிலாக 15 சதவீத தள்ளுபடியில் ரூ.240.10 கோடிக்கு மருந்துகள் விற்கப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் 58 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் 9,824 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.28.19 கோடிக்கு விற்கப்பட்டுள்ளது. தமிழக கூட்டுறவு அமைப்புகள் கடந்த 4 ஆண்டுகளில் 17 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளன.

கடலூர், ஈரோடு, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 5 மாவட்ட கூட்டுறவு வங்கிக் கிளைகள், 29 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 4 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள், ஒரு நகர கூட்டுறவு வங்கிக் கிளை என 39 கூட்டுறவு நிறுவனங்களின் அலுவலக கட்டிடங்கள் ரூ.4.23 கோடியில் நவீன மயமாக்கப்படும். 154 கூட்டுறவு கடன் சங்கங்களில் பாதுகாப்புப் பெட்டகங்கள், இரும் புப் பெட்டகங்கள் ரூ.4.15 கோடியில் அமைக்கப்படும். மத்திய கூட்டு றவு வங்கிகளின் சேவையை விரிவுபடுத்தும் வகையில், 8 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் 27 புதிய கிளைகள் ரூ.2.70 கோடியில் தொடங்கப்படும்.

கூட்டுறவு பண்டக சாலை களுக்கு 3 அலுவலக கட்டிடங்கள், வணிக வளாகங்கள் ரூ1.20 கோடி மதிப்பில் கட்டப்படும். கூட்டுறவு சங்கங்களில் ரூ.1.20 கோடியில் 200 பொதுச்சேவை மையங்கள் அமைக்கப்படும்.

நெல்லை, காஞ்சிபுரம், கடலூர், வேலூர், விருதுநகர், மதுரை மாவட்டங்களில் உள்ள 10 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு கடன் சங்கங்களாக மாற்றியமைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

**உலகில் மரங்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்தது**



உலகில் தற்போது 3.04 ட்ரில்லியன் மரங்களே உள்ளன. மரத்தின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ளது என்று வன மரங்கள் அடர்த்தி வரைபடம் தெரிவிக்கிறது.

மேலும் நபர்கள், மரங்கள் விகிதாசரமும், 422 மனிதர்களுக்கு ஒரு மரம் என்ற அளவில் உள்ளதாக இந்தக் கணிப்புகள் கூறுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் வெட்டப்படும் மரத்தின் எண்ணிக்கை 1,500 கோடிக்கும் அதிகமாகியுள்ளது. மேலும் ஆண்டொன்றுக்கு 192,000 சதுர கீமீ பரப்பளவுக்கு காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகள் அதிவேகமாக அழிக்கப்பட்டு வருவதால் மானுட நாகரீகம் தொடங்கும்போது இருந்த மரங்கள் எண்ணிகசை தற்போது பாதியாக குறைந்துள்ளது. இத்தகவல்கள் நேச்சர் என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ளது.

தற்போது இருக்கும் 3.04 ட்ரில்லியன் மரங்களில் வெப்ப மண்டல மற்றும் துணைவெப்ப மண்டலக் காடுகளில் 1.39 ட்ரில்லியன் மரங்கள் உள்ளன. வடமுனைப் பகுதிகளில் 0.74 ட்ரில்லியன் மரங்கள் உள்ளன. மிதவெப்பப் பகுதிகளில் 0.61 ட்ரில்லியன் மரங்கள் உள்ளன.

இன்றைய தேதி வரை உலக வனப்பகுதிகளை அளவிட விஞ்ஞானிகள் செயற்கைக்கோள் படங்களையே நம்பியிருக்கின்றனர். இதனால் மரங்கள் எண்ணிக்கையை சரியாக அளவிட முடியவில்லை. எனவே மரங்களின் எண்ணிக்கையைக் கண்டறியும் அசுர முயற்சியாக அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்தின் டி.டபிள்யூ. குரோதர் என்பவர் சுமார் 4 லட்சத்து 30,000 பூமி சார் அளவு முறைகளை பயன்படுத்தி அண்டார்டிகா நீங்கலாக அனைத்து கண்டங்களின் மரங்களைக் கணக்கிடும் உலக வரைபடத்தை உருவாக்கினார்.

ஓரளவுக்கு மிதவெப்பமும் நீராதார இருப்பும் மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்றாலும், பல இடங்களில் மிதவெப்ப, நீராதார இருப்பின் அளவுகளுக்கு இடையே கடும் இடைவெளி மிகுந்துள்ளதால் மரங்களின் வளர்ச்சி விகிதமும் கடுமையாகக் குறைந்துள்ளன. பல இடங்களில் அடர்ந்த காடுகள் பல விவசாய நிலங்களாக மாற்றப்பட்டதும் மரங்கள் காணாமல் போனதற்கு காரணமாகியுள்ளன.

“மரங்களின் அடர்த்தி மற்றும் மனிதர்களின் நிலப்பயன்பாடு ஆகியவற்றுக்கான உறவுகள் எதிர்மறையாக உள்ளது. இடத்துக்காக காடுகளை மனிதர்கள் எந்த அளவுக்கு அழித்து வருகின்றனர் என்பதை இது வெளிப்படுத்துகிறது. வெப்பமண்டல பகுதிகளில் காடுகள் அழிப்பு வேகம் அதிகமாக இருப்பதால், இதன் அளவு மற்றும் சீரான விளைவுகள் உலகின் அனைத்து வனப்பகுதிகளின் சுற்றுச்சூழல் அமைப்பையே தாக்கி வருகின்றன. காடுகளை நிலமாக்கும் மனித செயல்பாடுகள் உலக அளவில் இயற்கைசூழலை அழித்து வருகின்றன” என்று இந்த ஆய்வு கூறுகிறது.

இந்த அரிய ஆய்வின் மூலம் புவி வெப்பமடைதலில் மானுடச் செயல்பாடுகள் குறித்த புதிய புரிதல்களும், உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டிய புதிய உற்பத்திக் கொள்கைகள் பற்றியும் சிந்திக்க வேண்டிய காலக்கட்டம் உருவாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

## புவி வெப்பமடைதலை தடுக்க அமெரிக்கா ஒத்துழைக்கும்: அலாஸ்காவில் ஒபாமா உறுதி




புவி வெப்பமயமாதலை தடுக்க அமெரிக்க தொழிற்சாலைகள் வெளியேற்றும் கார்பன் அளவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமா பேசினார்.


அமெரிக்க அதிபர் ஒபாமா ஆர்க்டிக் வளைவில் இருக்கும் அலாஸ்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். வெப்பமயமாதலால் ஏற்கெனவே அழிந்துகொண்டிருக்கும் அலாஸ்காவின் பகுதிகளை அவர் முதல்முறையாக பார்வையிட்டார்.

அப்போது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் பேசிய அமெரிக்க அதிபர் ஒபாமா, "காலநிலை மாற்றம் குறித்து உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் பணியை ஈடுபட்டுவருகிறோம். ஆனால் நீங்கள் ஏற்கெனவே அத்தகையச் சூழலில் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்.

உலக மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் எதிர்பார்த்து தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலக அளவில் ஆர்க்டிக் வளைவின் வெப்பநிலை இரட்டிப்பாக அதிகரித்து வருகிறது. இதனை அனைத்து மக்களும் உணரவேண்டியது அவசியம்" என்றார்.

ஆர்க்டிக் வட்டத்தில் அமைந்திருக்கும் அலாஸ்கா பகுதியில் சுமார் ஒரு லட்சம் பேர் மிகவும் ஆபத்தானச் சூழலில் வாழ்ந்து வருவதாக ஏற்கெனவே அதன் அரசு அறிக்கை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

**தமிழகத்தில் நிலத்தடி நீர் 16 கோடி கனஅடியாக சரிவு_ : பூமிக்குள் கடல்நீர் ஊடுருவும் அபாயம்_**



மேற்கு ஜெர்மனியில் தார்ச்சாலையின் அருகே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்புத் தொட்டி. அடுத்த படம்: பூமிக்கடியில் திறந்த வெளி கிணறு, ஆள்துளை கிணறுகளில் ஊற்றுகள் செயல்படும் முறையை விளக்கும் வரைபடம்.

தமிழகத்தில் நிலத்தடி நீர்மட்டம் 16 கோடி கனஅடியாகக் குறைந்துள்ளதால், 2020- ல் கடல் நீர் பூமிக்குள் ஊடுருவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் 12 லட்சம் கிணறு கள், 39 லட்சம் ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் 91 ஆயிரம் கிணறு கள், 6 லட்சத்து 21 ஆயிரம் ஆழ் துளைக் கிணறுகள் உள்ளன. இவற்றில் 60 சதவீத கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் தற்போது வறண்டுபோய் உள்ளன.

கடந்த 1998 முதல் 2008-ம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகால மழை அளவை ஒப்பிடும்போது, எதிர்பாராதவிதமாக குறைந்து கொண்டே வருகிறது. இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை சிறப்பாக இருக்கும் என ஆய்வுகள் தெரிவித்தும், தற்போது 40 சதவீதம் மழை மட்டும் பெய்துள்ளது. இதேநிலை நீடித்தால், 2020-ம் ஆண்டில் மிகப்பெரிய வறட்சியை தமிழகம் எதிர்கொள்ள வேண்டிய நிலை உண்டாகும் எனவும்,

அதற் குள் நிலத்தடி நீரை செறிவுபடுத் தாவிட்டால் விவசாயம் பொய்த்து விடும் நிலை ஏற்படக்கூடும் எனவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து திண்டுக்கல் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை வேளாண் பொறியாளர் பிரிட்டோராஜ் கூறியதாவது:

‘‘தமிழகத்தில் 2011-ம் ஆண்டு நடைபெற்ற கணக்கெடுப்பில், நிலத்தடி நீரின் அளவு 26.2 கோடி கனஅடியாக இருந்தது. 2014-ம் ஆண்டு கணக்கெடுப்பில் நிலத்தடி நீர் 16 கோடி கனஅடியாகக் குறைந் துள்ளது. மக்கள் தொகை பெருக் கத்தால், நீரின் தேவை ஒருபுறம் அதிகரித்துக் கொண்டிருக்கையில், மறுபுறம் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மேட்டுப் பகுதிகள் நிலத்தடி நீரை இழந்து வருகின்றன. ஆற்றின் கரையோரங்களில் ஒருசில பகுதி களில் மட்டும் நீர்வளம் உள்ளது.

மூடாமல் விடப்படும் குவாரி பள்ளங்கள் மற்றும் அந்த பகுதியின் நிலத்தடி நீர், பூமிக்குள் உட்புக முடியாமல் உள்ளன. அதனால், குவாரியை சுற்றியுள்ள பகுதிகள் நாளடைவில் நீர்வளத்தை இழக்கின் றன. குவாரிக்கான தேவை முடிந்த பின், அவற்றை தோண்டப்பட்ட மணலைக் கொண்டு மூடிவிட வேண்டும். பெரும்பாலான குவாரி கள், மூடப்படாமல் உள்ளன.

உலக சுகாதார நிறுவன கணக் கெடுப்பின்படி, தனி மனிதனுக்கு ஒரு நாளைக்கு 135 முதல் 155 லிட்டர் நீர் தேவை. ஆனால், 75 சதவீதம் பேர் ஒரு நாளைக்கு 260 முதல் 300 லிட்டர் நீரை பயன்படுத்துகின்றனர். மீதமுள்ள 25 சதவீதம் பேருக்கு 40 லிட்டருக்கும் குறைவான தண்ணீரே கிடைக்கிறது.

ஊற்று என்பது 2 இன்ச் இடை வெளியில் 60 கி.மீ. நீளத்துக்கு பரவியிருக்கும் ஒரு அமைப்பு. ஒவ் வொரு பகுதியிலும் குறைந்தபட்சம் 6 முதல் 8 நீர் ஊற்றுகள் தரை யின் கீழ் உள்ளன. குடிநீர் மோட்டார் பயன்பாடு அதிகரிப்பால் ஊற்று தண்ணீர் அதிக அளவு

உறிஞ்சப்படுகிறது. மக்களிடம் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு இல்லாததால், மீண்டும் நீர்ச்செறிவு ஏற்படுவதில்லை. அதனால், விவ சாயத்தில் பெரிய தேக்கத்தை காண முடிகிறது. குடிநீருக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.''

இவ்வாறு அவர் தெரிவித்தார்.__

**சாலைகளில் மழைநீர் சேகரிப்பு**

நீர் சேமிப்பு குறித்து பிரிட்டோ ராஜ் கூறும்போது,

''5 ஏக்கர் நிலப் பரப்பு கொண்ட ஒரு கிராமத்தில் ஒரு மணி நேரத்துக்கு ஒரு இன்ச் அளவு மழை பெய்தால், அந்த கிராமத்துக்கு 5 லட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்கும்.

இன்று சாலைகள் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றப்பட்டுவிட்டன. அதனால், தண்ணீர் பூமிக்குள் புகுந்து செறிவூட்ட வசதியின்றி, பள்ளங் களை நோக்கி ஓடி ஊருக்கு பலனில்லாத இடங்களில் சேகர மாகிறது. வெளிநாடுகளைப் போல் தார் சாலையின் இருபுறங்களிலும் வழிந்தோடும் நீரை சேகரிக் கும் அமைப்புகளை உள்ளாட்சி நிர்வாகங்கள் ஏற்படுத்த வேண் டும்.

சாலையின் இரு புறங்களிலும் 6 அடி நீளம், 4 அடி அகலத்தில், சுமார் 5 முதல் 6 அடி ஆழம் கொண்ட குழிகளை அமைத்து சிமெண்ட் பலகை, மூடிகள் கொண்ட மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். இதில் 5 அடி வரை 60 மில்லி மீட்டர், 20 மில்லி மீட்டர் எடை கொண்ட ஜல்லிக் கற்களை நிரப்பி, மேல் பகுதியில் ஒரு அடி இடைவெளி விட்டால் அதன் வழியாக மழைநீர் விழுந்து சேகரிக்கப்படும். இவ்வாறு செய்தால் வறட்சியில் இருந்து தமிழகத்தை காப்பாற்றலாம்''.

இவ்வாறு பிரிட்டோ ராஜ் கூறினார்.